ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:


# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

| முழக்கம்-16 | பாஞ்சஜன்யம் ஏப்ரல் 2013-167 | ஒலி 4 |
|---|---|---|


## 1.காணாமற்போய்க் கொண்டிருக்கும் அடையாளங்கள்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் பல அடையாளங்கள் வாழ்க்கையில் தேவைப்படுகின்றன. இந்த அடையாளங்களே அவனது வாழ்கையின் பல பரிமாணங் களையும் வெளிப்படுத்துகின்றன. பல அடையாளங்கள் காலப் போக்கில் ஒருவரது வெற்றி தோல்விகளை மாற்றும் தன்மை கொண்டவை. ஆனால் சில அடையாளங்கள் என்றுமே மாறாது நிலைத்திருப்பவை. அவை பரம்பரை பரம்பரையாகத் தொன்று தொட்டு வரும் பண்பாட்டுச் சின்னங்களான மொழி, இனம், மதம், நாட்டுப் பற்று, கலாசாரம், ஆன்மீகப் பாரம்பரியங்கள் ஆகியவைகளாகும். மேலும் இவை ஒரு நாட்டின் அடையாளங் களாகவே போற்றப்பட்டு வந்தன. எனவே இப்படிப்பட்ட அடை யாளங்களை ஒருவன் மாற்றினால் அவனைச் சமுதாயம் மதிப்ப தில்லை. இப்படி மாற்றக்கூடாத அடையாளங் களை மாற்றி வீண் பேச்சுகளை பேசிக் கொண்டு உலகையும் தன்னையும்

ஏமாற்றிக்கொண்டு திரிகின்றனர் பெரும்பாலான பகுத்தறிவுத் தமிழர்கள்(?).

இந்திய நாட்டில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் நான் ஒரு இந்தியன் என்ற அடையாளம் எல்லாவற்றிலும் முதன்மையான தாகும். இந்த அடையாளம் தேவையில்லை என்று கூறிகொண்டு இந்த நாட்டில் வாழ்க்கை நடத்துவோர் தேசதுரோகிகளே. இந்தக் குறை பெரும்பாலான சிறுபான்மையரிடமும், போலி மதச்சார் பின்மை பேசுபவர்களிடமும், பகுத்தறிவுக் குஞ்சுகளிடமும் அதிக அளவில் காணமுடிகிறது. இவர்கள் நம்நாட்டை கூறுபோட்டு அன்னியர்க்கு விற்கவும் தயங்காதவர்கள்.

இரண்டாவது அடையாளம் ஒருவனது மதம். மதத்தை மாற்றுபவன் தன் தாரத்தையே விலைபேசத் துணிந்தவன் ஆவான். ஒருவன் தன் முன்னோர்களைப் பற்றி இழிவாகப் பேசக்கூடுமானால் அவனுக்கு அழிவுகாலம் வந்தவிட்டது என்று பெரியோர்கள் கூறுவர். இவ்வாறு மதம் மாறுபவன் தன்மானம் இழந்து அடைக்கலம் புகுந்த மதத்தில் சிறுமைப்படுத்தப் படுகிறான். பல்லாயிரம் வருடங்களாகப் பாரதத்தில் வேதமரபை ஒட்டிய வாழ்க்கை நெறிமுறைகளையே மக்கள் பின்பற்றி வந்தார்கள். உலக நாகரிகங்களிலேயே வேதகால நாகரிகம்தான் மிக பழமையானதும் முதன்மையானதும் நிலைத்து நிற்பதுமாகும். உலகின் மற்ற நாகரிக வளர்ச்சியின் முன்னோடி வேதகால நாகரிகமே. இதன் தாக்கத்தை எல்லா உலகநாகரிகங்களிலும் கண்கூடாகக் காணலாம். இங்கேயே வேதநெறிகளைப் புறக்கணித்துத் தோன்றிய, புத்த, ஜைன மதங்களால் ஸநாதன தர்மத்தை வெற்றிகொள்ள முடியவில்லை. பின் நாட்களில் படைஎடுத்து வந்த மிலேச்ச மதங்களாலும் வெற்றி கொள்ள முடியவில்லை. காரணம் ஸநாதன தர்மத்தின் உன்னதமான மனிதநேயக் கொள்கைகளும், அவற்றில் காணப்படும் இறைக் கொள்கைகளுமே ஆகும்.

எல்லாம்வல்ல இறைவன் ஒருவனே. அவன் ஆறறிவு படைத்தமனிதன், ஐந்தறிவு படைத்த விலங்கு உயிர் இல்லாத அசேதநப்பொருள்கள் மற்றும் அனைத்து உலகப்படைப்பு களிலும் உள்ளுறைபவன். அவன் இன்றி ஒரு அணுவும் அசையாது. இறைவனின் படைப்பை உருமாற்றம் செய்யலாம்



அன்றி ஒருவராலும் அழிக்கவும் ஆக்கவும் முடியாது. எந்த நன்மை பயக்கக்கூடிய, தீமை பயக்கக்கூடிய செய்கையின் எதிர்வினைப் பலனை இப்பிறவியிலேயே அனுபவிப்பான். எஞ்சி யவை அவன் சந்ததியினரையும் அவனது மறுபிறவியி லும்அவனை தொடர்ந்து தாக்கவோ பலன் அளிக்கவோ செய்யும் என்பதே ஸநாதன தர்மத்தின் உயர் கொள்கைகளாகும்.

நான் இறைவன் உண்டென்று நம்புகிறேன். இறைவன் என்னுள் உறைகின்றான். இப்படி நம்முள் இருக்கும் இறைவனை உணர்வதே ஆன்மிகம். இந்த உணர்வைப் பெற ஸநாதன தர்மம் பல வழிகளைக் காட்டியுள்ளது. இறை உணர்வைப் பெற்று முக்தி அடைந்தவர்கள் பலர். எப்படி காற்றையும், மின்சாரத்தையும் நாம் உணரலாமே அன்றிக் கண்ணால் காணமுடியாதோ, அவ்வாறே இறைவனை உணரலாமே அன்றி ஊனக்கண்களால் காணமுடியாது. அப்படி இறைவனை உணர்ந்தவர்களின் சக்தி அளவிடற்கரியது.

இறைவன் இருப்பதை மெய்ஞானம் மூலம் நிரூபிக்கலாம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று இறைவனை நான்காம் இடத்தில் வைத்துள்ளது ஸநாதந தர்மம். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு தூண்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது ஸநாதன தர்மம். ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஆராய்ந்து ஒரு வழிமறை வகுத்துள்ளது ஸநாதன தர்மம். மெய்ஞானமே உண்மையான விஞ்ஞானம் என்று நிரூபித்து வருவதும் ஸநாதன தர்மமே.

தொல்காப்பியர் காலந்தொடங்கி 18ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த புலவர்கள் அனைவரும் ஸநாதன தர்மமே தமிழர்மதம் என்றும், வேறு அந்நியமதக் கொள்கைகளைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை என்றும் அறுதியிட்டுள்ளனர். பெரியாரின் வழியில் நடப்பவர்கள் என்று கூறிக்கொண்டு, உண்மையை நம்ப மறுக்கும் கூட்டத்தினரை தெளியவைக்க யாராலும் முடியாது? குமரிக் கண்டம், லெமூரியாக் கண்டம் என்று எந்தக் கடல் ஆராய்ச்சியில் இறங்கி னாலும் உலகின் எந்த எந்தெந்த இடங்களை தோண்டி ஆராய்ந் தாலும் வெளிவருவது ஸநாதன தர்மத்தின் அடையாளங்கள் தான் என்பது திண்ணம். பின் எங்கிருந்து வரும் தனித் தமிழர் மதம்?

மிலேச்ச மதங்களின் கொள்கைகளாவன; இருப்பதோ ஒரு பிறவிதான் எனவே உலக இன்பங்களை இப்பொழுதே துய்த்திட வேண்டும். அதற்காக எல்லா அத்துமீறல்களையும் அடுத்தவர் நலத்தைக் கெடுக்கும் வகையில் மேற்கொண்டிட புனித நூலில் வழி செய்யப்பட்டுள்ளது. அப்படி செய்தால்தான் மேலும் சொர்க்கத்தில் இன்பத்துடன் கூடிய வாழ்க்கையை அனுபவிக் கலாம். இவை இறைத் தூதுவர்களால் போதிக்கப்பட்டது என எழுதி வைத்து அதன்படி நடக்கிறார்கள். இதை நிறைவேற்றுவது எப்படி என்ற இந்தத் துர்போதைனைகள் தான் முக்கால் பங்கு இந்தப் "புனித" நூல்களில் காணப்படுகின்றன. எஞ்சிய சில நற்போதனைகள் எல்லாம் ஸநாதன தர்மத்தின் போதனைகளைப் பின்பற்றியும் அவற்றை உள்ளபடி புரிந்து கொள்ளாமலும் சில மாற்றங்களுடன் எழுதிவைத்துள்ளார்கள் என்பதே உண்மை. இவ்வாறு குழம்பிய குட்டையில் குளிக்க பணம், பதவி, பட்டம் என்ற ஆசைகளை நிறைவற்றிக்கொள்ள பல அப்பாவி இந்துக்கள் மதம் மாறி தம் அடையாளங்களை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்துப் பெண்களின் அடையாளங்களான கழுத்தில் தாலி, குங்குமப் பொட்டு, தலைநிறைய பூ, காலில் மெட்டி இவற்றுடன் காணப்படும் பெண்களை எதிர்கொண்டு சென்றால் அவை நன்மையைப் பயக்கும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஆனால் மதம்மாறிய இந்துப் பெண்களைக் கூட்டங்கூட்டமாக ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த அடையாளங்கள் எதுவும் இல்லாமல் காணும்போது வேதனையாக உள்ளது. இவற்றைத் துறந்தவர்கள் ஏன் புடவையை மாற்றி 'கவுன்' 'மிடி' போன்ற அன்னிய மத ஆடைகளை அணியத் துணிவதில்லை? பிறந்தநாளின் பொழுது பெரியவர்களை வணங்கிக் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடுவது இந்துக்களின் வழக்கம். ஆனால் இன்று தன் பெயரையே கேக்கில் எழுதி அதை கத்தியால் வெட்டி ஏற்றிய மெழுகுவர்த்தியை ஊதி அணைப்பது எத்துணை முறைகெட்ட செயல் என்பதை உணராமலேயே பிறந்தநாள் விழாக் கொண்டாடுகிறார்கள் (இந்த நோய் இந்து மக்களிடையே அதிக அளவில் காணப்படுகிறது Happy Birthday கொண்டாடுகிறேன் என்று கேக் வெட்டுவது பரவலாகக் காணப்படுகிறது. வைதிக குடும்பங்களும் இதற்கு விதி



விலக்கல்ல). அம்மா அப்பாவை மம்மி டாடி என்று பெருமையாக அழைக்கின்றனர் சிறுவர் சிறுமியர்கள். மம்மி என்றால் செத்த பிணத்தைக் குறிக்கும். டாடி என்ற சொல்லுக்கு பல்வகையாகப் பொருள் கொள்ளலாம்.

தமிழன் என்ற இன அடையாளம் தமிழர்களின் ரத்தத்தில் கலந்து பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. ஆரம்பத்தில் இது தமிழர்களின் கலை, இலக்கியம், ஆன்மிகம், நாட்டியகலை, சிற்பக்கலை, இசை, பண்பாடு, கடல்கடந்த வாணிபம் தேசிய ஒருமைபாடு என்ற எண்ணற்ற செயல்களைப் பறைசாற்றியது. ஆனால் காலப்போக்கில் தமிழன் என்ற இன உணர்வு சிதைந்து திராவிடன் என்ற அடையாளத்தை ஏற்றதால் அது தேசியத்தை பிரிக்கும் சக்தியாக உருப்பெற்று இந்துமத எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, வடமொழி வெறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு, அன்னியமதக் காதல் என்ற பிரிவினை உணர்வுகளின் வெளிப்பாடான ஒரு ஈர்ப்பு சக்தியாக மாறிவிட்டது.

தமிழரின் உயர் கொள்கைகள், தமிழர்களின் பக்திநெறி என்று ஒட்டுமொத்த இந்தியர்களின் முன்னேற்றத்திற்கும் நாகரீக செழுமைக்கும், ஆன்மிக எழுச்சிக்கும் பெரும்பங்கு அளித்த நாடு தமிழ்நாடு என்பதை மறந்து, மறைத்து தம் முன் னோர்களின் பங்களிப்பையும் பெருமையையும் உருத்தெரியாமல் புதைத்திடக் படுகுழி வெட்டிக்கொண்டிருக்கும் திராவிட மாயை. பூண்டோடு ஒழிக்கப்படவேண்டும். விலங்கினங்களை விடக் கேவலமான பான்மைகெட்ட போலி திராவிடப்பேய் ஒடுக்கப் படவேண்டும். தமிழர் தம்பெருமையை உணர்ந்து தலைநிமிர்ந்து நிற்கவேண்டும். பெரியார் புராணம் மிகைப் படுத்திப் பாடப்படுவதை நிறுத்த வேண்டும்.

பார்ப்பனனைப் பிடிக்கவில்லை (அவ்வப்போது 'அவாள்' என்று தனக்கு அரசியல் நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் கலைஞர் பிதற்றிடுவார். அந்தப் பிதற்றல் கூட்டத்தில் தம்மையும் தற்போது இணைத்துக் கொண்டுள்ளார் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம். இவரின் முன்னோர்கள் பழுத்த ஆன்மிகவாதிகள்.), பார்ப்பனப் புலவர்கள் இயற்றிய இலக்கியங்கள் பிடிக்கவில்லை சரி, ஆன்மிகம் பிடிக்கவில்லை, ஸம்ஸ்க்ருதம் பிடிக்கவில்லை (ஸம்ஸ்க்ருதம் பார்ப்பனர்களின்

மொழி மட்டும் அல்ல, புத்த மற்றும் ஜைன மதக் கொள்கைகளைப் பறைசாற்றும் பெரும்பாலான நூல்கள் ஸம்ஸ்க்ருதத்தில் தான் அமைந்துள்ளன.), ஸநாதந தர்மம் பிடிக்கவில்லை ஆனால் இவற்றின் தாக்கம் இல்லாத இலக்கியங்களே எதுவுமே இல்லை என்பதுதான் உண்மை. பின் எதற்கு இந்தப் போலி செம்மொழிப்பற்று? இன்று கடவுள் மறுப்புக் கொள்கைகளை நா வரளப் பேசும் பகுத்தறிவாதிகள் மற்றும் இந்து சமய எதிர்ப்பாளர்களான மொழிக் காவலர்கள் வீடுகளில் உள்ள பெண்கள் தலையில் ஒருகட்டு பூவுடன், ஒரு ரூபாய் அளவில் குங்குமப்பொட்டினை வைத்துக் கொண்டு ஊரில் உள்ள கோயில்களை சுற்றி வருகிறார்கள். உயிரோடும் உணர்வோடும் கலந்துவிட்ட ஒன்றை எத்தனைகாலம்தான் ஆரிய மாயை என்று அவதூறு சொல்லி ஏமாற்றிக்கொண்டிருப்பது. வாய்மையே வெல்லும்.

பெரியார் துதி பாடவா, செயின்ட் தாமஸ் துதி பாடவா, ஜி.யூ. போப் துதிபாடவா, கால்டுவெல்லை கொண்டாடவா, சோனியா துதி பாடவா, ஆதிகிருஸ்துவத்துதி பாடவா, லெமூரியா கண்டத்துதி பாடவா, இவற்றில் எதற்காகத் தமிழா நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய்.

“யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணேன்” என்றான் பாரதி ஆனால் பச்சை தமிழன் என்று தன்னை அடையாளங்காட்டிக் கொள்ளும் கூட்டத்தின் தலைவர் தமிழை ‘காட்டு மிராண்டி பாஷை’ என்று சொன்னார். எல்லாம் தமிழ் என்று சொல்லிக்கொண்டு தன்வீட்டுப் பிள்ளைகளுக்கு மேல் நாட்டவர்களின் பெயரை வைத்து, ஆங்கிலப்பள்ளியில் படிக்கவைக்கிறார்கள். ஒற்றைவரி ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும், வள்ளுவனின் இரட்டைவரி திருக்குறளும் வெளிப்படுத்தும் ஒழுக்கநெறிகளைப் பள்ளிகளில் பாடங்களாக வைத்திடாமல் கனிமொழிக் கவிதைகளும், கலைஞர் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. நீதிநெறியைப் போதிக்க வேண்டிய ஆசிரியர்களே பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். பள்ளிப்படிப்பு முடிவதற்கு முன்பாகவே, காமக்களியாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர் பள்ளிச் சிறார்கள். தமிழும் ஸம்ஸ்க்ருதமும் தமிழர்களுக்கு தாயும் தந்தையும் ஆகும். தாயிற் சிறந்த கோயில் இல்லை, தந்தை சொல் மிக்க



மந்திரம் இல்லை என்ற உண்மைப் புரியாமல் தனித்தமிழ் என்று தமிழ் உச்சரிப்பைக்கூட சரியாக மேற்கொள்ளத் தெரியாத ஒரு கூட்டம் தமிழ் மொழியைக் கொலை செய்து கொண்டு இருக்கிறது. தமிழ் இனி மெல்லச்சாகும் என்ற பாரதிதாசனின் வாக்கு உண்மையென்றே தோன்றுகிறது.

இதைவிடக் கொடுமை தெய்வப்புலவர் திருவள்ளு வருக்கு, கிறிஸ்துவ பாதிரியான செயின்ட் தாமஸ்தான் மயிலாப்பூர் கடற்கரையில் பாடம் நடத்தினார் என்று, சற்றும் இன உணர்வற்றச் செய்திகளை மறுத்துச் சொல்ல இயலாத பகுத்தறிவாதிகள் வாய்மூடி மௌனிகளாய் கிறிஸ்தவர்களுக்குத் தாளம் போட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழையும் சரியாகக் கற்காமல், அண்டை மாநிலங்களில் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரக்கூடிய இந்திய பொது மொழியான ஹிந்தியையும் கற்காமல், ஆங்கிலத்தையும் அரைகுறையாகக் கற்று, ஒரு தலைமுறையை வீண் அடித்த பெருமை இந்த திராவிடப் பகுத்தறிவாளிகளையே சாரும்.

பல மிலேச்சர்களின் ஆக்ரமிப்பாலும், காலனி ஆதிக்கத்தாலும், ஜாதி, தீண்டாமை போன்ற கொடிய சமூக வழக்கங்கள் ஏற்பட்டதோடு ஸநாதன தர்மத்தைப் பற்றியும், இந்து இலக்கியங்களை பற்றியும், சரியாகத் தெரிந்து கொள்ளாமல் வேண்டுமென்றே பிரிவினை வாதத்தை வளர்த்து, தாறுமாறாக சரித்திரச் சான்றுகளை எழுதிவைத்து சென்று விட்டனர் ஆங்கிலேயர். இப்படிபட்ட ஆதாரம் இல்லாத நூல்கள் தான் இன்று நாட்டில் மலிந்து காணப்படுகின்றன. இவைகளைத் திராவிடப் பகுத்தறிவுக் குஞ்சுகள் உண்மை என்று நம்பி தமிழர் மதம் வேறு, இந்து மதம் வேறு இது ஆரியர்கள் சூழ்ச்சி என்றெல்லாம் அவதூறு பரப்பி கொண்டிருக்கிறார்கள்.

நமது எழில்மிகு கோயில்களின் பரிதாப நிலையை நினைத்தால் நெஞ்சு பதறுகிறது. Archeological Survey of India & HR&CE department ஆகிய அரசு சார்ந்த அமைப்புகளின் அட்டூழியங்கள் சொல்லி மாளாது.

நமது இந்திய அரசாங்கமும் சுதந்திரத்திற்கு பின் பாரதத்தின் பாரம்பரிய சின்னங்களைப் பாதுகாப்பில் ஒரு

மெத்தன போக்கையே கடைபிடித்து கொண்டிருக்கிறது. பாரம் பரியச் சின்னங்களான கோயிற்சிலைகள், வண்ண ஓவியங்கள், புகழ்வாய்ந்த கட்டடங்கள் என்று எதையுமே பாதுகாப்பதில்லை. மாறாகப் பழமை வாய்ந்த கல்வெட்டுகளை உருத்தெரியாமல் உடைத்தெரியப்படுகின்றன. அண்மையில் திருவரங்கம் பெரிய கோயிலில் ராஜமகேந்திரன் திருச்சுற்றின் வடபுறத்தில் அமைந்திருந்த தொண்டைமான் மேட்டுப் பகுதி யாது காரணங்களுக்காகவே இடிக்கப்பட்டது. அப்போது பத்துக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் சிதைக்கப்பட்டன. துச்சாதனனின் செயலுக்கு ஒப்பான இந்தத் திருக்கோயில் இணை ஆணையரின் செயலுக்கு துரியோதனனுக்கு ஒப்பான இந்துசமய அறநிலையத்துறை ஆணையரிடம் முறையீடு செய்து என்ன பலன் கிடைக்கும். பழமையைப் பாதுகாப்பதில் யாருக்கும் விருப்பம் இல்லை. கோயில்களை வைத்து பணம் பண்ணுவதே இன்றைய அரசின் குறிக்கோள். இத்தகைய அத்துமீறர்களுக்கெல்லாம் எண் 476/2012 வழக்கில் உச்சநீதி மன்றம் வழங்கக்கூடிய தீர்ப்பே முடிவுகட்டக்கூடும். தொல்பொருள் ஆய்வுத்துறையில் உள்ளவர் கள் எப்படித் திட்டம் தீட்டி பொதுமக்கள் கண்ணில் மண்ணைத் தூவி புனர்நிர்மானம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு இடிப்பது. சேதப்படத்துவது, சுவடு தெரியாமல் அப்புறப்படுத்துவது போன்ற பாதகச் செயல்களைச் செய்துவருகிறார்கள் என்பதற்கு பல நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

2007 ஆம் ஆண்டுதொட்டு ASI மற்றும் HR&CE அமைப்புகள் நமது பாரம்பரியச் சின்னங்களைப் புதுப்பிப்பதாகச் சொல்லிக் கொண்டு கலைநயத்துடன் இருந்தவற்றை பொலிவிழக்க செய்துவருகின்றனர். இது எப்படி இருக்கின்றது என்றால் நன்கு அலங்கரிக்கப்பட்ட மங்களச் சின்னங்களை அணிந்து கொண்டுள்ள மணப்பெண்ணிற்கு அமங்கலமான விதவைக் கோலம் பூண வைப்பதற்கு ஒப்பாகும். இந்து சமுதாயமே நீ என்று விழித்துக் கொள்வாய்!

தமிழனின் அடையாளங்களை அழிப்பதற்கு ஆதரவுதரும் பகுத்தறிவு கூட்டம் ஒருநாள் தமிழனை நாகரிகம் இல்லாத பரதேசிகள் என்று உலகிற்கு அடையாளப்படுத்துவதும் நாள் வெகு தொலைவில் இல்லை. ***



# SOME SALIENT FEATURES OF THE ADDITIONAL AFFIDAVIT ON THE STATE OF AFFAIRS AT SRIRANGAM TEMPLE, WHICH IS TO BE SUBMITTED AT THE SUPREME COURT IN CONNECTION WITH THE WRIT PETITION NO.476/2012.

Srirangam is considered to be the holiest of all the Vishnu temples in the world. The administration of this temple was established by Sri Ramanuja 950 years ago. He divided the services into twenty groups so that every person could do some service to the Lord.

The present administration under the HR&CE has totally watered down many regulations established by Sri Ramanuja. Srirangam Koil administration at present is in the hands of government officials who know nothing about the customs and traditions .Their sole aim is to make money! money!! money!!!. It is a place where there is rampant corruption coupled with maladministration are prevalent. To cite a few examples the audit reports for the fasalis 1417,1418,1419 point out how money is swindled, spent on unplanned and wasteful activities , gross negligence in observing rules and regulations and so on.

Fasali 1417 :

Auctioning of the properties belonging to Srirangam temple, and other temples attached to Srirangam Devastanam.

1. Favouritism and nepotism was shown on many occasions. Defaulters alone were invited to participate in the auctions. The audit has pointed out that a full fledged enquiry has to be conducted to bring out and assess the total loss to the Temple. The audit report also says that the outstanding amounts due from these defaulters should be collected immediately. But the public is not aware of the follow up action made by the HR&CE department.

2. The cattle stock on the day of audit was short by 105 cows and no proper explanation was offered. Obviously these cows were missing from the kottaram known as cattle shed. The estimated loss was Rupees one lakh and five thousand.

3. Tickets that were issued were found to have the same numbers on many bundles and the so called unsold tickets were not shown to the audit and loss estimated to be Rupee one lakh thirteen thousand five hundred. The counterfoils of the tickets that were sold at the main temple were not found and it is suspected that a financial fraud to the tune of Rs.17,76,118/- might have taken place.

4. Salary was paid as if the same person served in the temple kitchen on the same day at two different places. The loss to the Temple was Rs.27450/- .

5. Donations that were given for free distribution of sweet cake to the tune of Rs.1,25,000/- were not credited to the accounts.

6. In reinvesting surplus cash there was a loss to the tune of Rs.4,32,285/-. The audit had indicated that departmental action should be initiated on the person responsible for such a decision.

7. The register containing information on the movable and immovable properties was not updated after 1990. The original register was found missing. As per section 30 of the HR&CE act 1959 the register has to be upgraded every year and as per sections 31 of the 1959 act the register has to be prepared afresh as 16 years had lapsed.

8. Proposals containing the plan of expenditure known as 'Thittapathivedu' was approved in the year 1991. As per section 58 (5) of the 1959 HR&CE act for every three years the Thittapathivedu has to be prepared taking into account the various constraints and the inflatory trends. Even though fifteen years had since lapsed new Thittapathivedu had not been prepared. As a



result of this very meagre amount is alloted to the subtemples.

9. Lease agreements and rental agreements were not executed with many lessees and shop owners.

10. Lands in the East Uthra street ( a prime residential area) to the tune of 0.11 acre belonging to the Devastanam was fraudulently sold by H.H.Perarulala Jeeyar of Tirukkurungudi Mutt to one Amman builders. Eventhough this was pointed out in the subsequent audit reports also it is not known what further action was taken by the Devastanam in this issue.

11. Tickets that were sold were not in order and had no proper serial numbers. This would have obviously paved the way for fraudulent financial activities.

12. Register of cases filed against other persons, cases filed by public against Devastanam, judgement obtained, fees paid to the advocates was not maintained.

13. The following registers which are to be maintained as per the 1959 act was not maintained.

a. Register of lands from which regular income was obtained.

b. Register of electrical connections and other electrical maintenance record.

c. Register on works and repairs carried out.

d. Register of endowments indicating the nature of endowments, income from the endowments and the expenditure etc.

e. Register of buildings and plots.

f. Part payment register.

Fasali 1418:

1. Counter foil of the tickets sold at the Sri Ranganachiyar sannidhi to the tune of Rs.16,70,516/- was not available. Obviously a very big fraud has taken place.

2. Register of trees in the landed property of the temple at Srirangam and other places was not maintained.

3. Several shops were alloted to one single person namesly Srinivasan and the rent arrears to the tune of Rs.3,08,333/- was pending on the day of the audit.

4. Income from irrigational lands at several places in Tamilnadu and A.P was not collected and the estimated loss is around Rs.1,61,666/-.

5. Many lands belonging to temple has been illegally occupied by several persons and no action has been initiated by devastanam to vacate them.

6. Eventhough the inam abolition court has ordered retrieval of 329.91 acre in possession of illegal occupants ,it is yet to be taken over by the devastanam till date. Nor has any income been derived from these usurpers. The illegal occupants are enjoying the property with the connivance of temple officials.

7. Account is not properly maintained at the Tulabharam site and many offerings from the devotees are taken away by the individuals.

8. The audit has pointed out that many endowments established by devotees are not carried out properly and no account is maintained on the income and expenditure.

9. Surplus funds to the tune of several crores (Rs.27.5 crores) are found to be invested in different banks in violation of the guidelines.

Fasali 1419:

1. Payments had been made to several persons as if they had supplied milk, curd, ghee, garlands, oil, prasadams by multiplying the expenditure for one tirumanjanam i.e. if 20 thirumanjanam on a day is booked to Chakkarathazhwar and Kattazhagiya Singar, 20 x 5 litre milk , 20 x 2 litre curd , 20 x (x) etc. The audit has



pointed out that this account is a falsified account. Such type of fraudulent expenditure is incurred throughout the year there by swindling the public money.

2. Collection from various counters to the tune of several lakhs were paid at the main office after a lapse of two or three days. This is a gross violation of financial discipline. Obviously the money had been rotated for personal gains.

3. The register of cloths offered by devotees was not maintained and no proper account rendered .

4. The audit had pointed out that arrears/outstandings from the following institutions sources/ persons to the tune of several crores not collected.

The split up details are available in the 1419 Fasali audit report.

5. Rent arrears from shops runs to Rs.20 Lakhs.

6. By accepting cash in lieu of paddy the loss estimated Rs.94,000/-.

7. Rent arrears from residents occupying temple lands runs to Rs.19.5 lakhs.

8. Rent arrears(ground rent) from government hospital for the years 1976-2011 is Rs.62 lakhs.

9. A guest house was built in the area belonging to Madurakavi trust near Ammamandapam. In the year 2009 at an estimated cost of Rs.55 lakhs. This was financed by the devastanam surplus cash. On 24-01-2010 the guest house building was completed and handed over to devastanam. Till date the guest house is not utilized and there is a litigation going on between the Madurakavi Nandavanam trust and Temple the authorities. For the past 3 years the guest house is in a locked condition. A thorough probe has to be initiated on this gross financial miss management.

Other lapses not pointed out in the audit :

1. There is no manual on honours, customs and traditions to be maintained. This act of omission leads to many problems. Everything is carried out on oral tradition. Even though the high court had directed in the year ..... to prepare a manual till date it is not done. Srirangam temple with its multiple complexities needs proper documents with directions for its smooth functioning.

2. There is a continuous interference in the inner temple activities which is prohibited by the several acts and constitutional guarantee. One such act is denial of an honour known as Brahmaratham and restricting the pooja times, not offering the holy prasadams at specified hours in accordance with the agamas under the pretext of accommodating large number of devotees for darshan, and offering prasadams meant for different times at one stroke in the early hours of the day on Purattasi Saturdays under the pretext that as there is large number of devotees uninterrupted darshan has been arranged and no time to be wasted by offering prasadams.This is not acceptable. The agamas are meant for observance. accommodating large number of devotees cannot be a reason. With lakhs of devotees thronging at Tirumala through out the year the darshan is stopped at different timings to offer poojas and prasadams. Srirangam devastanam officials do not know the principles of crowd management and are driven by the greed for money alone and they have scant respects for agamas and traditions.

3. Archeological evidences are frequently destroyed. To cite a few examples -

a. The Dhanvantri Sannithi precincts(outer portion) was demolished and no proper explanation was offered .When this question was raised under R.T.I. Different types of incoherent replies were given by the then Executive officer Jayaraman.

b. Stones and slabs containing Epigraphs were destroyed at Thondaiman medu behind the main Vimanam, in the Chandana



Mandapam, in the Raja Mahendran precinct and at other important places.

4. No proper reply is received for several queries under R.T.I. and evasive beating around the bush sort of replies are given .Samples enclosed.

5. There is rampant corruption at every level in this temple. Quick darshan is arranged by touts by accepting big amount from gullible visitors/ devotees and since the booty is shared by many the issue is watered down if any objections are raised.

6. The trustees appointed belong to political parties which are in power. They are not aware of the age old customs and traditions of this temple and they are mere puppets in the hands of the political party in power.

7. Exorbitant charges are levied for Dharshan on different occasions at the whims and fancies of the executive officer .Ticket prices range from Rs.50/- to Rs.1000/-.and are fixed without any logic. As pointed out in the audit report lot of duplicate tickets and tickets without proper serial number are sold. There by an organized scam takes place on a very large scale in the Srirangam temple.

8. In the name of devotion and respect to Lord lot of money is extracted from the general public for all types of maintenance works and no account is rendered or made public. For example donations are sought by the devastanams for spreading of sand or painting of grills. Many devotees offer their money as service to Lord. For a particular work money is collected or received more than the requirement. But the total receipts for the work and the expenditure incurred is neither intimated to the donor nor to the public.

9. On any particular day many devotees offer their contribution for carrying out the poojas especially at the main sannithi. For example, If there are five such donors only one set of prasadams

is offered to the Lord and the money collected is not spent but paper account is rendered as pointed out in the audit report.

10. Temple funds are spent on feeding the public on Annadurai's (a former Chief Minister of Tamilnadu) birth / death anniversary. This is totally unethical. Just because the party in power whether AIADMK or DMK owe their alligiance to Annadurai, the temple funds are spent. This has to be stopped.

11. There is a place inside the temple known as 'Prasadam stall'. The dictionary meaning of prasadam is "a food offered to Lord which is considered to be holy". But foodstuff sold at the so called prasadam stall is prepared in private houses and in a separate kitchen where foodstuff is prepared like a hotel. The word 'Prasadam' should be removed at this place. Substandard ingredients are used for preparation of " Prasadams" .This should be stopped.

12. In total there is gross mismanagement and rampant corruption at the Srirangam Temple.In fact the replies given for queries raised under R.T.I. are comical in nature.There is no administration taking place at the great Srirangam Temple .In fact it is run like the harem of a kingdom.Anybody can do anything in Srirangam Temple and he or she is not answerable to anyone as can be evidenced from the callous reply given by the RTI officer of the Srirangam Devasthanam ( particular reference is made to the RTI replies regarding one sthaneekam Jabtha sampath.The reply is nothing but a mockery of the temple administration and complete breakdown of the HR and CE machinery).

The HR&CE department is treating the Temple as a commercial complex with the sole aim of making money. The officer, the staff and other temple servants are not doing their assigned duty properly which is obvious from the audit report. There are many more lapses pointed out in the audit report and also observed by general public. It is high time that the temple administration is entrusted to persons of integrity and honesty selected from the public. ***

# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 166இன்தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

ஒரு மலரில் உள்ள தேனைப் பருக ஒரு வண்டு அம்மலரில் போய்க் குடியிருக்கும். அம்மலரில் தேன் இருக்கும் வரை அதிலேயே மயங்கிக் கிடக்கும் தேன் தீர்ந்து போன பின் அம்மலரிலிருந்து வெளியேறி வேறு ஒரு மலருக்குத் தாவிவிடும். ஆனால் பகவானின் அழியாத திருவடி மலர்களில் என்றுமே குறையாத (பூர்ண மது$_4$நா) தேன் நிரம்பியிருப்பதால் அங்கு செல்லும் முக்தாத்மாக்கள் என்னும் வண்டுகள் அத்திருவடி மலரிலிருந்து திரும்பி வருவதே இல்லை. என்றும் பகவானின் திருவடிகளில் தொண்டு செய்தபடியே, திருவடிகளின் பேரின்பச் சுவையை அநுபவித்துக்கொண்டு அங்கேயே இருக்கிறார்கள் என்பது தாத்பர்யம். ஸ்ரீவைஷ்ணவர்கள் சரணாகதியை உயர்ந்த தத்வமாகக் கொண்டிருப்பதற்கு இதுவே காரணம்.

இன்னொரு விஷயமும் இதிலிருந்து புலப்படுகிறது. வேதத்தில் வேறு எந்த தேவதைக்கும் இப்படிப்பட்ட சிறப்பு சொல்லப்படவில்லை. மற்ற தேவர்கள் அனைவருமே பகவான் விஷ்ணுவின் திருவடித்தேனைப்பருகியே உய்ந்து கொண்டிருக் கிறார்கள். அதனால் மற்ற தேவர்ககளைப் பற்றி நிற்பவர்கள் முக்தியடைய முடியாது. முக்தியடைய பகவான் விஷ்ணுவின் திருவடிகளையே பற்றவேணும். அங்குதான் அழியாத அமரத்வநிலை இருக்கிறது. மற்ற உலகியல் பலன்களுக்காக மற்ற தேவதைகளை நாடி அந்த தேவதைகள் மூலம் அடையும் பலனும் உண்மையில் பகவான் விஷ்ணு அநுக்ரஹிக்கும் பலன்தான். ஏனெனில் மற்ற தேவர்கள் உய்வதும் விஷ்ணுவின் திருவடியில் பெருகி நிற்கும் அழியாத தேனாம்ருதத்தால் தான் என்பதை இந்த மந்திரம் தெளிவாக முழங்குகிறதன்றோ!

மேலும் இம்மந்திரத்தில் பகவான் விஷ்ணுவின் பரத்வம் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்படுகிறது. தனியொருவனாகவே

பூமி, ஆகாயம், மூன்று தாதுக்கள் இவற்றுடன் எல்லா உலகங்களையும் (புவநாநி விஶ்வா) தன் திருவடியால் பகவான் தாங்குவதாகக் கூறப்படுகிறது. இம்மந்திரத்தில் உள்ள 'ய உ' என்ற பகுதி மிக முக்யத்வம் வாய்ந்தது. 'உ' என்று வடமொழியில் ஏகாரப்பொருள் உடையது. அதாவது 'ய உ' என்றால் 'அவனே', 'அந்த பகவானே' என்று பொருள். அவன்தான் பூமி, ஆகாயம், மூன்று தாதுக்கள் அடங்கிய எல்லா உலகங்களையும் தாங்குகிறானேயொழிய மற்றவர்கள் தாங்கவில்லை என்று பொருள். அதுமட்டுமின்றி 'ஏகோ' என்ற சொல் அவன் மட்டுமே இவற்றைத் தாங்கினான். மற்றவர்கள் யாரும் அவற்றைத் தாங்கும் விஷயத்தில் உதவவில்லை என்ற பொருளில் வந்துள்ளது. ஆகவே இதனால் பகவான் விஷ்ணுவே ஸர்வேஶ்வரன், பரமேஶ்வரன் என்பதை இம்மந்திரம் மூலம் அறிய முடிகிறது. த்ரிதாதுக்கள் என்றால் மூன்று பிரிவாக உள்ள அனைத்துப் பொருட்களையும் குறிக்கும். அவை அனைத்தையும் பகவானே தாங்குகிறான் என்கிறது வேதம், உதாரணமாக ஓங்காரத்தில் அ,உ,ம என்ற மூன்று பிரிவுகள் உள்ளன. இந்த மூன்றையும் தாங்குபவன் பகவான் அதாவது ஓங்காரமே அவனுள் அடக்கம் என்றபடி. இப்படி மூன்று பிரிவாக உள்ள மற்ற எல்லா சேதனா சேதன வஸ்துக்களையும் பகவானே தாங்குகிறான் என்று தாத்பர்யம்.

அடுத்து 5-ஆம் மந்திரத்தின் விளக்கத்தைப் பார்ப்போம்.

**தத$_3$ஸ்ய ப்ரியமபி$_4$ பாதே$_2$ா அஶ்யாம்**
**நரோ யத்ர தே$_3$வயவோ மத$_3$ந்தி ।**
**உருக்ரமஸ்ய ஸ ஹி ப$_3$ந்து$_4$ரித்த$_2$ா**
**விஷ்ணோ: பதே$_3$ பரமே மத்$_4$வ உத்ஸ: ॥**

**இதன் பொருள்:** "உலகளந்த பரமனான விஷ்ணுவின் ஸ்தானமான பரமபதத்தில் தேனாம்ருத வெள்ளம் இருக்கிறது. தேவ தேவனான அவனை விரும்பும் மனிதர்கள் அந்தத் தேனாம்ருதத்தைப் பருகிக் களிக்கின்றார்கள். அந்தப் பரமனின் திருவடித் தேன் வெள்ளத்தை நானும் அருந்தக் கடவேன் (அல்லது) அப்பரமபதத்திற்குச் செல்லக்கடவேன்). அந்த விஷ்ணுவன்றோ எல்லாவிதமான உறவாகவும் இருப்பவன்".



இம்மந்திரத்தில் உள்ள 'இத்தா' என்னும் சொல் முன் மந்திரப் பொருளின் தொடர்பைக் காட்டுகிறது. இதற்கு முந்தைய மந்திரத்தில் பகவானின் திருவடிகளில் தேன் வெள்ளம் பெருகுவதாகக் கூறப்பட்டது. அத்தேன் வெள்ளம் பெருகி பரமனின் ஸ்தானமான பரமபதம் முழுவதும் நிறைந்திருப்பதாக இம்மந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. பகவான் விஷ்ணுவை விரும்பும் மனிதர்களே அத்தேன் வெள்ளத்தைப் பருகிக் களிக்கமுடியும். அதாவது விஷ்ணுவின் மீது மாசற்ற பக்தி கொண்டவர்களுக்கே பரமபத வாசம் கிடைக்கும் என்பது தாத்பர்யம். அந்த பாக்யத்தை தானும் அடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறார் மந்த்ரத்ரஷ்டாவான ரிஷி. பரமபதம் சென்றவர்கள் திரும்பி வர மாட்டார்கள். ஏனெனில் அங்கிருக்கும் பரமனான விஷ்ணுவின் அண்மை தரும் பேரின்பத்தை விட உலகில் வேறு எந்த இன்பமும் பெரிதல்ல. அந்த பகவானின் திருவடி மலர்கள் தரும் நிரந்தர அமைதி, இன்பம், சந்தோஷம் இவற்றை வேறு எங்கும் காண முடியாது. எதைவிடப் பெரிய இன்பம் வேறு இல்லையோ அதையே அடைந்து விட்டபின் வேறு என்ன வேண்டும். என்றும் அழியாத பேரின்ப வெள்ளமான அவனது உறவு நமக்கு நிரந்தரமாகக் கிடைத்தபின் நிரந்தரமில்லாத மற்ற உறவுகளை உறவுகளாக நினைக்க முடியுமோ? அதனால் தான் பகவான் விஷ்ணுவே நமக்கு உறவினன் என்கிறது வேதம் "ஸ ஹி பந்து" (அவனன்றோ உறவினன்) என்ற இம்மந்திரச் சொற்கள் மந்திர சக்தி வாய்ந்த மஹத்வம் மிக்க சொற்கள்.

இம்மந்திரம் - தைத்ரீய ப்ராஹ்மணம் 2-ஆம் அஷ்டகம் 4-ஆம் பிரச்னத்தில் 52-ஆம் பிரிவிலும் வருகிறது.

இனி 6-ஆம் மந்திரம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

**தா வாம் வாஸ்தூந்யுஶ்மஸி க$_3$மத்$_4$யை**
**யத்ர க$_3$ாவோ பூ$_4$ரிஶ்ருங்க$_3$ா அயாஸ: ।**
**அத்ராஹ தது$_3$ருக$_3$ாயஸ்ய வ்ருஷ்ண:**
**பரமம் பத$_3$மவ ப$_4$ாதி பூ4ரி ॥**

**இதன் பொருள்:** எங்கும் விரைந்து பரவும் இயல்புள்ளவையும் தலையிலிருந்து வெளிவருபையுமான ஒளிக்கதிர்கள் எங்கிருந்து வருகின்றனவோ அவ்விடத்தை அடைய ஆசைப்படுகிறோம். அங்குதான் பெரிய விதமாகப் புகழப்படுபவனும் அருள் மழையைப் பொழிபவனுமான விஷ்ணுவின் பரமபதம் உள்ளது".

இம்மந்திரம் பகவான் விஷ்ணுவின் மிகவுயர்ந்த ஸ்தானமான பரமபதத்தின் தோற்றத்தை வர்ணிக்கிறது. பேரொளிமிக்க விஷ்ணுவின் ஸ்தானம் ஒன்றே அடையத்தக்கது என்று சொல்லப்படுகிறது. பகவான் விஷ்ணுவின் ஒளியே அவனுடைய பரமபதம் முழுவதும் ஒளி வெள்ளமாகப் பெருகிக் கிடக்கிறது. அவ்வொளி விரைந்து எங்கும் பரவும் இயல்புடையது என்று சொல்லப்படுகிறது. அவ்வொளியே அகில உலகமும் பரவி சூரியன் முதலிய ஒளிமண்டலங்களையும் ஒளிரவைக்கிறது. மற்ற தேவதைகளும் அவ்வொளியைப் பெற்றே உய்வடைகிறார்கள். 'வ்ருஷ்ண:' என்றால் வர்ஷிப்பவன் (பொழிபவன்) என்று பொருள். பகவான் விஷ்ணு தனது அருளைப் பொழிவதாலேயே உலகமே உய்கிறது. அவனது ஒளியைப் பொழிவதாலேயே மற்ற தேவர்களும் ஒளிபெற்றுத் திகழ்கிறார்கள். 'கே$_3$ா' என்ற சொல் ஒளிக்கிரணங்களையும் குறிக்கும். சூரியனையும் நேரடியாகச் இச்சொல் குறிக்கும் என்கிறது யாஸ்க நிருக்தம் (ஆதி$_3$த்ய: அபி கௌ$_3$ள உச்யதே-யா. நிருக்தம்-2-6) அதனால் பகவான் விஷ்ணுவின் சிரஸிலிருந்து கிளம்பும் ஒரு ஒளிக்கதிரே சூரியன் என்று புலப்படுகிறது. 'க$_3$ாவ:' என்று பன்மையைப் சொல்வதால் பல சூரியன்கள் என்று ஏற்படுகிறது இந்த பிரம்மாண்டத்தில் பல சூரியன்கள் இருப்பதாக வேதம் சொல்வதால் எல்லாச் சூரியன்களுமே பகவானின் சிரஸிலிருந்து தோன்றியவர்கள் தான் என்பது தாத்பர்யம்.

அதனால் நாம் கண்ணால் காணும் சூரியமண்டலம் பகவான் விஷ்ணுவின் திருமுக மண்டலத்திற்கு தோன்றியது என்பதே வேதம் காட்டும் உண்மை. ஆகவே அகில உலகத்திலும் உள்ள மிகப்பெரிய ஒளிமண்டலங்கள் எவை எவை உண்டோ அவை அனைத்தும் பகவான் விஷ்ணுவின் ஒளியில் ஒரு சிறு அம்சமே என்பதுதான் தாத்பர்யம். அவ்வளவு பெரிய



மகத்தான பேரொளி மிக்கவர் பகவான் விஷ்ணு. அவரே மிகப்பெரிய ஜோதி ஆவார். அப்படிப்பட்ட பகவான் இருக்கும் இடமான பரமபதமே அடையத்தக்க ஸ்தானம் என்றும் அதை அடைய ஆசைப்படுவதாகவும் இம்மந்திரத்தில் ஸங்கல்பிக் கப்படுகிறது. மற்ற தேவர்களின் ஒளியும் அவர்களின் ஸ்தானங்களும் பகவான் விஷ்ணுவிடமிருந்து அடைந்த சக்தியால் மஹத்வம் பெற்று விளங்குவதால் அவை சுதந்திரமான இயற்கையான பெருமையுள்ளவை அன்று. ஆகவே அவை யெல்லாம் அடையத்தக்கவை அன்று. தன் மஹிமையினாலே இயல்பாகவே ஒளி உமிழும் அந்த பரமனான விஷ்ணுவின் ஸ்தானமே அடையத்தக்கது என்பது இம்மந்திரப் பொருள்.

இனி ரிக்வேதம் - முதல் மண்டலம் 155-ஆவது ஸூக்தத்தைப் பார்ப்போம். இந்த ஸூக்தத்தில் மொத்தம் 6 மந்திரங்கள் உள்ளன. இவற்றில் முதல் மூன்று மந்திரங்கள் இந்திரனையும் விஷ்ணுவையும் சேர்த்துச் சொல்கின்றன. மீதமுள்ள மூன்று மந்திரங்கள் (4,5,6) விஷ்ணுவைப் பற்றி மட்டும் பேசுகின்றன. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

தேவர் தலைவனான இந்திரன் பல சந்தர்ப்பங்களில் தனது எதிரிகளை மாய்க்க பகவான் விஷ்ணுவின் உதவியை நாடுவது வழக்கம். இது வேதத்திலேயே மிகத் தெளிவாகச் சொல்லப்படுகிறது. அசுரர்களால் தேவர்களுக்குத் துன்பம் ஏற்படும்போது பகவான் விஷ்ணு இந்திரனுக்கு உதவி செய்வது வழக்கம். பகவானின் பரத்வத்தை முழுமையாக உணரும் அளவிற்கு முழுமையான ஞானம் தேவர்களுக்கும் சில நேரங்களில் இல்லாமல் போய்விடும். அதற்குக் காரணம், அவர்களும் இந்தப் பிரக்ருதி மண்டலங்களில் வசிப்பதால் தான். அதனால் பகவான் தன் பரமாத்ம ஸ்வரூபத்தை அவர்களுக்குக் காட்டாமல் மறைத்துக் கொண்டு அவர்களுக்குள் ஒருவனாகவே இருந்து கொண்டு அவர்களுக்கு உதவுகிறான். அதனால் இந்திரன் பகவான் விஷ்ணுவை தன் நண்பனாகவே கருதிவிடுகிறான். அந்த வகையில் இந்திரனுக்கு உதவி செய்யும் பகவானை இந்திரனோடு சேர்த்து புகழ்கிறார் மந்திரத்ரஷ்டாவன ரிஷி. இந்திரன் தேவர் தலைவனாக இருந்தும் பகவான்

விஷ்ணுவின் உதவியினாலேயே அவன் தன் எதிரிகளை முறியடித்தான் என்பதால் இந்திரனைப் போற்றும் துதிகளும் பகவானையே சென்று சேரும் என்பதும் பகவானே எல்லாத் துதிகளுக்கும் தகுதியுடையவன் என்பதும் இங்கு புலப்படுகின்ற தெளிவான விஷயம். இனி முதல் மந்திரத்துக்கான விளக்கத்தைப் பார்ப்போம்.

**ப்ர வ: பாந்த மந்த$_4$ஸோ தி$_4$யாயதே மஹே**
**ஶூராய விஷ்ணவே சார்சத ।**
**யா ஸாநுநி பர்வதாநாம்த$_3$ாப்$_4$யா**
**மஹஸ்தஸ்த$_2$துரர்வதேவ ஸாது$_4$நா ॥**

சிறந்த குதிரைகளின் மீது ஏறி சவாரிசெய்வது போல இன்பமும் நிறைவும் தரும் உலகங்களின் உச்சியில் சஞ்சரிப்பவர்களும் தடைசெய்யப்பட முடியாதவர்களுமான, மஹாசூரனான இந்திரனுக்கும், விஷ்ணுவுக்கும் உங்கள் அந்நத்தை ஸமர்ப்பியுங்கள்".

இன்பமும் நிறைவும் தரும் உலகங்கள் என்று இங்கு குறிப்பிடப்படுபவை தேவலோகங்கள். பகவான் விஷ்ணு தேவலோகங்களை ஆக்ரமிக்க வரும் அசுரர்களை வெல்ல இந்திரனுக்கு உதவி செய்ய தேவலோகங்களுக்கு வருகிறா ரன்றோ! அதனால்தான் இந்திரனும் விஷ்ணுவும் தேவலோகமான சுவர்கலோகத்தில் அதிகம்பீரமாக சஞ்சரிப்பதை குதிரைகளில் ஏறிவரும் வீரர்களைப் போல் சஞ்சரிப்பதாக இங்கு கூறப்படுகிறது. இங்கு உலகங்களின் உச்சியில் என்பது தேவலோகத்தை மட்டுமே குறிக்கும். விஷ்ணுவின் பரமபதத்தைக் குறிக்காது. ஏனெனில் விஷ்ணுவின் பரமபதத்தை தேவராஜாவான இந்திரன் கூட அடைய முடியாது. மற்ற எந்த தேவர்களும் கூட அடைய முடியாது. ஏனெனில் சென்றால் திரும்பி வர முடியாத உயர்ந்த பதம் அது. அங்கு செல்வதற் கென்று ஒரு தனிப்பட்ட தகுதியும் வேண்டும். முக்திபெறும் ஆத்மாக்கள் மட்டுமே அங்கு செல்லமுடியும். ஆகவே இங்கு உயர்ந்த உலகங்களின் உச்சி என்பது இந்திரலோகம் முதலான தேவலோகங்கள் தான். பகவான் விஷ்ணுவின் துணை இருக்கும்



போது இந்திரனும் மற்றவர்களால் தடைசெய்யப்பட முடியாதவனாகிறான். அதாவது மற்றவர்களால் வெல்லப்பட முடியாதவனாகிறான். மஹா சூரன் என்ற பெருமையும் இந்திரனுக்கு விஷ்ணுவினாலேயே ஏற்பட்டது. இந்திரனுக்கு ஸஹாயம் செய்யும்போது விஷ்ணுவை மந்த்ரத்ரஷ்டவான ரிஷி ஸாக்ஷாத்கரித்தமையால் இந்திரனையும் சேர்த்தே புகழ்கிறார். இருவருக்கும் அந்நத்தை ஸமர்ப்பிக்கச்சொல்கிறார். இங்கு அந்நம் (அந்த$_4$ஸ:) என்பது வேள்விகளில் ஸமர்ப்பிக்கப்படும் ஹவிஸ், சோமபாநம் மானிடர்கள் வசம் உள்ள அந்நம், போகப் பொருட்கள் அனைத்தையும் குறிக்கும். இவை எல்லாமே பகவானுக்கு அர்ப்பணம் செய்யவே உள்ளன. மனிதனின் சுய உபயோகத்திற்காக அன்று என்பது இதனால் பெறப்படுகிறது. பகவதாராதனத்துக்காகவே நாம் பொருளைத் தேட வேண்டும் நம் போகத்துக்காக அன்று என்பது தாத்பர்யம்.

இனி இரண்டாவது மந்திரத்தின் விளக்கத்தைப் பார்ப்போம்.

**த்வேஷமித்த$_2$ா ஸமரணம் ஶிமீவதோ**
**ரிந்த்$_3$ராவிஷ்ணூ ஸூதபா வாமுருஷ்யதி ।**
**யா மர்த்யாய ப்ரதி தீ$_4$யமாநமித்**
**க்ருஶாநோரஸ்துரஸநாமுருஷ்யத$_2$:॥**

**இதன் பொருள்:** "இந்திர விஷ்ணுக்களே! விரும்பியவற்றை அநுக்ரஹிக்கும் உங்களின் ஒளிமயமான வருகையை வேள்வி செய்யும் கர்த்தா போற்றி வரவேற்கிறான். வேள்வி செய்பவனுக்கு உரிய பலனை அளிக்கும் நீங்கள் அக்னியில் ஹோமம் செய்பவனுக்கு அந்த அக்நி மூலமாகவே அளிக்கிறீர்கள். அந்தப் பலன் அடைவதில் உள்ள இடையூறுகளையும் நீக்குகிறீர்கள்."

வேள்வி செய்பவனுக்கு, அவன் விரும்பும் பலனை இந்திர விஷ்ணுக்கள் அளிக்கிறார்கள் என்பதும் வேள்வி செய்பவனுக்கு ஏற்படும் இடையூறுகளையும் அவர்கள் நீக்குகிறார்கள் என்பதும் இம்மந்திரத்தில் சொல்லப்படுகிறது விஷ்ணுவின் உதவியோடு இந்திரன் வேத வைதிக விரோதிகளான அசுரர்களை அழிக்கிறான். அத்துடன் வேள்வி செய்பவனுக்கு இடையூறுகள்

செய்பவர்களையும் கண்டித்து அடக்கி வேத வைதிக கார்யங்கள் தடையின்றி நடைபெற இந்திர விஷ்ணுக்கள் உதவி செய்கிறார்கள். வேத தர்மம் அழியாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவே பகவான் விஷ்ணு இந்திரனுக்கு உதவியாக வருகிறார். எந்த அக்னியில் ஆஹுதி செய்து இந்திர விஷ்ணுக்கள் வழிபடப்படுகிறார்களோ அந்த அக்னியின் மூலமாகவே யாகம் செய்பவன் தான் விரும்பும் பலனை அடைகிறான். இந்திரனுக்கு விஷ்ணுவே உதவி செய்வதால் இந்திரனுக்கென்று தனிப்பட்ட பெருமையோ தகுதியோ கிடையாது. பூவுடன் சேர்ந்த நாறும் மணம்பெறும் என்றபடி விஷ்ணுவுடன் சேர்ந்து பெருமை பெறுகிறான் இந்திரன். உண்மையில் வேத வைதிக தர்மத்தைக் காப்பதும் வேள்விப் பலனைத் தருவதும் விஷ்ணுவேயொழிய இந்திரன் இல்லை.

அடுத்த மூன்றாவது மந்திரத்தைப் பார்ப்போம்.

**தா ஈம் வர்த$_4$ந்தி மஹ்யஸ்ய பௌம்ஸ்யம்**
**நி மாதரா நயதி ரேதஸே பு$_4$ஜே ।**
**த$_3$த$_4$ாதி புத்ரோ(அ)வரம் பரம் பிதுர்நாம**
**த்ருதீயமதி$_4$ ரோசநே தி$_3$வ: ॥**

**இதன் பொருள்:** அந்த அஹூதிகள் வேள்வி செய்பவனுக்கு செல்வம், புகழ், ஆண்மை இவற்றை வளர்க்கின்றன. மிகவும் ஒளிரும் சூரியமண்டலத்தில் ஜீவனை இணைத்து அவனை பிதாவாகவும் புத்ரனாகவும் பௌத்ரனாகவும் பூமியில் பிறக்க வைக்கிறான். பகவானின் அநுக்ரஹத்தால் ஒருவனுக்கு புத்திரனாகப் பிறக்கும் ஜீவன் புத்திரன் என்ற உயர்ந்த பெயரையும், பௌத்ரன் என்ற தாழ்ந்த பெயரையும் பிதா என்ற மூன்றாம் பெயரையும் அடைகிறான்."

இந்திர விஷ்ணுக்களே இம்மந்திரத்திற்கு தேவதை என்று வேதத்தால் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இதில் ஏகவசனத்திலேயே விஷயம் சொல்லப்படுகிறது. ஆகவே இம்மந்திரம் இந்திரனை மட்டுமோ அல்லது விஷ்ணுவைப் பற்றி மட்டுமோ தான் பேசுகிறது என்று கொள்ள முடியும். இம்மந்திரத்தில் பிரஜாசிருஷ்டி சொல்லப்படுகிறது. பிரஜைகளை



உத்பத்தி செய்ய இந்திரிய பலம் வேண்டும். பலத்துக்கு இந்திரன் அதிபதி ஆகையால் மானிடர்க்கு இந்திரிய பலம் இந்திரனால் ஏற்படுகிறது என்பதாகிறது. (மயீந்த்$_3$ர இந்த்$_3$ரியம் ததாது) ஆகவே இம்மந்திரம் இந்திரனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அதே நேரத்தில் எல்லா தேவதைகளுக்கும் சக்தியை அளிப்பவன் பரமாத்மாவான விஷ்ணுவே என்பதால் இம்மந்திரத்தில் ஏகவசனத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் நேரடியாக பகவான் விஷ்ணுவைக் குறிக்கிறது என்றும் சொல்லலாம். விஷயம் இருவருக்கும் பொருத்தமானதாகையால் தான் இம்மந்திரத்திற்கு இந்திர விஷ்ணுக்களே தேவதை என்று வேதமே நிர்ணயித்து விட்டது. ஒரு ஜீவன் கர்மாநுகுணமான சரீரத்தை எடுத்துப் பிறந்தவுடன் அவன் அவனுடைய தந்தைக்கு மகன் என்ற நிலையை அடைகிறான் அவனுடைய பாட்டனுக்கு பேரன் என்ற நிலையை அடைகிறான். அவனுக்கே ஒரு மகன் பிறந்தபின் தந்தை என்ற நிலையையும் அடைகிறான். இப்படி ஒரே ஜீவன் பல பெயரை அடைவதை இம்மந்திரம் விவரிக்கிறது. கர்மாநு குணமான சரீரத்தை எடுத்துக்கொண்டு ஜீவன் பிறப்பதற்கு பகவானே காரணம் என்பது இம்மந்திரம் மூலம் பெறப்படும் உண்மை ஆகும்.

அடுத்து நான்காவது மந்திரம் பின்வருமாறு:

**தத்ததி$_3$த$_3$ஸ்ய பௌம்ஸ்யம் க்$_3$ருணீமஸீநஸ்ய**
**த்ராதுரவ்ருகஸ்ய மீள்ஹுஷ: ।**
**ய: பார்தி$_2$வாநி த்ரிபி$_4$ரித்$_3$விக$_3$ாமபி$_4$ருரு**
**க்ரமிஷ்டோருக$_3$ாயாய ஜீவஸே ॥**

**இதன்பொருள்:** "மிகவும் புகழத்தக்க வகையில் எந்த விஷ்ணு உலகைக்காக்க தனது மூன்றடிகளாலே பூமியில் உள்ள புழுதிகளை எல்லாம் ஒன்று விடாமல் அளந்தருளினாரோ, அனைவருக்கும் தலைவனும் எல்லோரையும் எல்லாவற்றையும் காப்பவனும், கருணாமூர்த்தியும் என்றும் இளைஞனாக இருப்பவனுமான அந்த விஷ்ணுவின் ஆண்மைத் தன்மையைப் போற்றுவோம்."

இந்த மந்திரம் மிகப்பெரிய உண்மைகளைப் பறை சாற்றுகின்றது. உலகத்தைக் காக்க தன் மூவடியால் பகவான் அகிலத்தை அளந்தது ஈடு இணையற்ற புகழ்மிக்க வீரச் செயல். அச்செயலை பரமனான அவனைத் தவிர வேறு யாராலும் செய்ய இயலாது. அகில உலகையும் அளந்து தன் வசமாக்கிக் கொண்ட படியால் அவனே அனைவர்க்கும் தலைவனாகிவிட்டான். தேவர் மநுஷ்யர் உள்ளிட்ட அகில உலகிலும் உள்ள ஜீவராசிகளையும் அவனே காப்பாற்றுகிறான். கருணைக்கடலான அவன் என்றும் இளைஞனாக இருப்பவன் என்று சொல்லப்படுகிறது. அதாவது பிரக்ருத உலகிற்கு வசப்பட்டவர்களுக்கே காலத்தால் ஏற்படும் மாற்றங்கள் ஏற்படும். பகவானே ப்ரக்ருத உலக வரையறைகளுக்கு அப்பாற்பட்டவன். ப்ரக்ருதியை இயக்குபவனே அவன்தானே! ஆதலால் சராசரி ஜீவனுக்குள்ள விகாரங்கள் அந்த பரமனுக்கு ஏற்படாது. மற்ற தேவர்கள் அனைவரும் ப்ரக்ருதி மண்டலத்திற்கு உட்பட்டவர் ஆகையால் அவர்களுக்கு காலத்தால் ஏற்படும் மாற்றங்கள் உண்டு. அவர்கள் என்றும் இளமையாய் இருக்கமுடியாது.

ஆனால் பகவான் காலத்தைக் கட்டுப்படுத்துபவன். காலம் அவனைக்கட்டுப்படுத்தாது. அதனால்தான் அவன் என்று இளமையானவன் என்று சொல்லப்படுகிறான். அப்படிப்பட்ட அந்த பகவானுக்கே உரிய ஆண்மைத்தன்மையைப் போற்றுவோம் என்கிறது இம்மந்திரம். அவனுக்கே உரிய ஆண்மைத்தன்மை என்று சொல்லப்படுவதால் மற்றவர்களுக்கு உள்ள ஆண்மைத்தன்மையை விட இந்த ஆண்மைத்தன்மை உயர்ந்தது என்று புலப்படுகிறது. அதனாலேயே பகவான் விஷ்ணுவுக்குரிய ஆண்மைத் தன்மையைப் போற்றிப் புகழ வேண்டும் என்கிறது வேதம். இதில் இன்னொரு உண்மையும் புலப்படுகிறது. அதாவது கடவுள் பால் வேறுபாடுகளைக் கடந்தவன்; கடவுள் ஆணும் இல்லை பெண்ணும் இல்லை என்று சொல்பவர்களின் வாய்களில் மண்ணை வைத்து விட்டது இந்த மந்திரம். அகில உலகையும் படைத்துக் காக்கும் பரமனான விஷ்ணு மிகவுயர்ந்த ஆண்மகன் என்கிறது வேதம். அவன் ஆண் என்றால் மற்ற ஆண்களைப் போல் சாதாரணமான ஆண்



இல்லை அவன். அவன் மிகவுயர்ந்த சக்திவாய்ந்த ஆண்மைத் தன்மையையுடைய ஆண்மகன். அவனது ஆண்மைத் தன்மைக்கு ஈடு இணையில்லை. அவனது ஆண்மைத் தன்மைக்கு முன் அவனால் படைக்கப்பட்ட மற்ற ஜீவராசிகள் அனைத்தும் பெண்தன்மை கொண்டவைகளே. பரம்பொருள் ஆண் என்று வேதமே கூறிவிட்டபடியால் பெண்தெய்வத்தை பரம்பொருள் என்று கூறும் சாக்தமதம் அவைதிகமானதும் என்பதும் அது வைதிகர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று என்பதும் தெளிவாகப் புலப்படுகின்றவிஷயம்.

**இனி ஐந்தாவது மந்திரத்தைப் பார்ப்போம்.**

**த்$_3$வே இத$_3$ஸ்ய க்ரமணே ஸ்வர்த்$_3$ருஶா(அ)பி$_4$க்யாய**
**மர்த்யோ பு$_4$ரண்யதி ।**
**த்ருதீயமஸ்ய நகிரா த$_3$த$_4$ர்ஷதி**
**வயஶ்சந பதயந்த: பதத்ரிண: ॥**

**இதன்பொருள்:** "அழியும் இயல்புள்ள மனிதன் பரமபதத்தை காண்பவனான விஷ்ணுவின் இரு அடிகளைக் கண்டு விஷ்ணுவைப் புகழ்கிறான். விஷ்ணுவின் மூன்றாவது அடியைக் காணும் சக்தி அவனிடம் இல்லை. எங்கும் சஞ்சரிக்கும் காற்றும், உயரப் பறக்கும் பறவைகளும் கூட அதை அறியமாட்டா:"

பகவான் விஷ்ணு மூன்று அடிகளால் உலகை அளந்ததாக வேதம் கூறுகிறது. ஆனால் அவனுடைய இரண்டு அடிகளை மட்டுமே மனிதர்கள் அறிய முடியும். மூன்றாவது அடியை அறிய முடியாது என்கிறது வேதம். ப்ரக்ருதி மண்டலத்திற்கு அப்பாற்பட்டு இருக்கும் பரமபதத்திலேயே பகவான் விஷ்ணுவின் மூன்றாவது அடிவைப்பு இருக்கிறது. ப்ரக்ருதி மண்டலத்தில் உள்ள மனிதர்களால் அதை அறிய முடியாது. ஏனெனில் அதை அறிய ப்ரக்ருதி மண்டலத்தின் வாசனை முற்றிலும் ஒழிந்து முக்தன் என்ற உயர்ந்த நிலையை அடைந்தால்தான் முடியும். அதனால்தான் ப்ரக்ருதி மண்டலத்திற்கு வசப்பட்டிருக்கும் மனிதன், காற்று, பறவைகள் இவற்றால் அதை அறிய முடியாது என்று கூறப்பட்டது.

ப்ரக்ருதி மண்டலத்திற்கு அப்பாற்பட்டு அபராக்ருத உலகில் இருப்பவனான பகவான் விஷ்ணுவின் பரமபதத்தை அறிய ப்ரக்ருதி மண்டலத்திற்குள் இருக்கும் எந்த ஒரு சக்தியாலும் முடியாது. மனிதன், காற்று, பறவைகள் இவற்றைச் சொன்னதன் மூலம் ப்ரக்ருதி மண்டலத்திற்குட்பட்ட தேவர்கள் முதலிய மற்ற எந்த சக்திகளாலும் கூட அதை அறிய முடியாது என்பது தெளிவாகிறது.

**இனி ஆறாவது மந்திரத்தைப் பார்ப்போம்.**

**சதுர்பி$_4$: ஸாகம் நவதிம் ச நாமபி$_4$ச்சக்ரம்**
**ந வ்ருத்தம் வ்யதீகும் ரவீ விபத் ।**
**ப்$_3$ருஹச்ச$_2$ரீரோ விமிமாந ருக்வபி$_4$ர்**
**யுவாகு$_3$மார: ப்ரத்யேத்யாஹவம் ॥**

**இதன்பொருள்:** "தொண்ணூற்று நான்கு பிரிவுகளைக் கொண்ட காலச்சக்கரத்தைச் சக்கரத்தைச் சுழற்றுவது போல் தனது நியமனத்தினாலே விஷ்ணு சுழற்றுகிறார். மிகப்பெரிய திருமேனியையுடையவரும், துதிகளாலேயே அறியத்தக்கவரும் என்றும் இளைஞனாயிருப்பவருமான அந்த விஷ்ணு போர்க் களத்தை சென்றடைகிறார்." காலத்தை இயக்குபவனே பகவான் விஷ்ணு தான் என்கிறது இந்த மந்திரம். 94 காலப் பிரிவுகள் என்பது ஒரு வருடத்தின் காலக்கூறுகள் அயனங்கள் இரண்டு (தக்ஷிணா யனம், உத்தராயணம்) ருதுக்கள் ஆறு (வஸந்தம், கிரீஷ்மம், வர்ஷம், சரத், ஹேமந்தம், சிசிரம்) மாதங்கள் பனிரெண்டு, பக்ஷங்கள் 24, நாட்கள் 30, யாமங்கள் 8, ராசிகள் 12 இவையெல்லாம் சேர்த்து 94 ஆகும். ஒரு வருடம் என்பது இந்த 94 அங்கங்களைக் கொண்டது. இந்தக் காலக் கூறுகள் சக்கரம் போல் சுழன்று வருகின்றது, அதாவது வருடம் என்ற காலச்சக்கரத்திற்கு இந்த 94 அங்கங்களும் ஆரங்கள் ஆகும். பல ஆரங்களைக் கொண்ட வட்டவடிவமான சக்கரத்தை சுழற்றுவது போல் இந்தக் காலச் சக்கரத்தையும் பகவான் சுழற்றுகிறான் என்று கூறப்படுகிறது. இதனாலேயே பகவான் விஷ்ணுவின் கையில் சக்கரம் இருக்கிறது என்று தெளிவாகிறது.

(தொடரும்)



# மாறன் பாப்பாவினம்

இதழ் 166இன் தொடர்ச்சி.
டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.

**பொன்னெடுங்குன் றெனச்செறிந்து**
**புடைத்தெழுமென் புளகமுலை**
**மின்னனலாம் நுண்ணிடைஅவ்**
**வேய்புரையும் துணைமென்தோள்**
**குளிர்மதிபோன்று ஒளிர்வதனக்**
**கோமளப்பூங் கொம்பன்னாள்**
**தளிர்புரைமெல் லடிச்சுவடும்**
**தளர்ந்தனவெய் யோன்என்றால்**
**குடைதிசைவான் கதிர்சுருக்கிக்**
**கொடித்தேரி னொடுமறைந்தான்.**
**அடல்புனைவே டுவர்என்றால்**
**அற்றம்பார்த்து ஆறலைப்பர்.**
**பொன்புனை பூண் மணிமார்பின்**
**புரவலஇன்று இருவீரும்**
**நன்குலத்துஎம் இல்வைகி**
**நறுந்தேன்செந் தினைஅருந்தி**
**மரை அதளில் துயிலமர்ந்து**
**வைகறைவாய்த் துயில்எழுந்து**
**விரைகமழ்தார் மகிழ்மாறன்**
**மெய்த்தமிழ்ச்சொல் குருகூரின்**
**முதிர் திரைப்பா லாழியின்வான்**
**முகடுரிஞ்சும் உதயகிரிக்**
**கதிர்வருமுன் சேர்தல் கடன்.**
**(இது வெண்கலிப்பா.என்னை?)**

**"வெண்தளை தன்தளை என்றுஇரு தன்மையின்**
**வெண்பா இயலது வெண்கலி யாகும்"**

என்றார் காக்கை பாடினியார். இதனுள்ளும் வெண்தளை தட்டு வெள்ளோசை தழுவியும் கலித்தளை தட்டுத் துள்ள லோசைத்தாகியும் ஈற்றடி மூச்சீரான் வந்த (இற்ற)வாறு காண்க.

பகுதி - உடன் போக்கு. துறை - நெறிவிலக்கல். அலங்காரம் - அவயவம் அவயவி இரண்டினையும் உவமைப் படுத்தலான் முற்றுவமை).

முலை, இடை, தோள், முகம், அடி ஆகியவற்றுக்கு முறையே - குன்று, மின், வேய், மதி தளிர் ஆகியன உவமையாக்கி அவயவியாகிய தலைவிக்குக் கொம்பை உவமையாக்கி யமையால் இது முற்றுவமை எனப்பட்டது.

குன்று-மலை. செறிந்து - திரண்டு. வேய் - மூங்கில். புரையும் - போன்ற. துணைத்தோள் - இருதோள்கள். வதனம் - முகம். கோமளம் - மென்மை. வெய்யோன் என்றால் - சூரியனோ என்றால். அற்றம்பார்த்து - வாய்ப்புக் கண்டு. ஆறு அலைப்பர் - வழிப்பறி செய்வர். குலம் - ஊர். இல் - வீடு, வைகி - தங்கி. மறை அதள் - மான்தோல். பாலாழியின் - பாற்கடல்போல். கதிர் - சூரியன்.

தலைவன் தலைவியுடன் கான்வழியில் உடன் போகின்றான். எதிரே கண்டவர் பாலைவழியில் பகலில் செல்லுதல் வேண்டா. இரவு எம்வீட்டில் தங்கிச் சூரியன் உதிக்குமுன் வைகறையில் செல்க என்று வழிவிலக்குவதாக அமைந்தமையால் இது நெறிவிலக்கல் துறையானது.

கொம்பனாளின் அடிச்சுவடு தளர்ந்தன. சூரியனோ என்றால் கொடித்தேரி னொடு மறைந்தான். வேடுவரோ என்றால் சமயம் பார்த்து வழிப்பறி செய்வர். ஆதலால் புரவலனே! நீவிர் இருவீரும் எம்வீட்டில் இரவுதங்கி, தேனும் தினையும் உண்டு, மான்தோலில் துயின்று வைகறையில் எழுந்து கதிர் வருமுன் செல்வது கடனாகும் என்பது பாடலின் திரண்ட கருத்து.

**படுதிரைப்பா லாழி பயந்தவெண் திங்கள்**
**நடுவண தாகிய நாள்மலர் நீலம்**
**இணைஎன வான்முகத்து எய்தும் துணைவிழி**



**நன்னீர் அருவி நறுந்தேன் அருவியுடன்**
**மன்னீர்மை வாய்ந்தனவாம் மாழை வரைபுரையும்**
**வெண்ணித் திலத்தாமம் மேதகுமா மணிவடத்தில்**
**பண்அமைத் தோங்கிய பைம்பூண் புணர்முலை**
**கூற்றுரு நேர்ந்துஒர் குறிப்போடு உயிர்உண**
**மாற்றுருக் கூர்தல் மருள்வணர் ஐம்பால்**
**எம்போன்று அரும்பணி ஈறின்று இயற்றாது**
**உமதா ருயிர்கொண்டு ஒருவுமின் சேய்த்தென்று**
**அருள்தக ஆண்டாண்டு அணித்துறு மைந்தர்க்கு**
**உருபுஅமை நூபுரம் ஓவாது ஒலிக்கும்**
**தளிர்புரை மெல்லடித் தையல் பொருட்டால்**
**இளம்பிறை வெண்கோட்டு இரும்பினர் வான்கை**
**வளம்கெழு தீ விழி வாரண வேட்டைக்குச்**
**சிங்கம் குழூஉச்செய் சீறூர் அதரிடை**
**இங்குயாம் துன்புற ஈண்டிருள் யாமம்**
**பனிமகிழ் மாறன் பராங்குசன் வெற்பிற்**
**தனிவரல் வேலோய் தவிர். 106**
**(இது கலி வெண்பா. என்னை?**

**"ஒரு பொருள் நுதலிய வெள்ளடி யியலால்**
**திரிவின்றி நடப்பது கலிவெண் பாட்டே"**
**(தொல். செய். 14)**

என்பதனால் உணர்க. இவனுள் வெண்தளை தட்டு, வெள்ளோசை தழுவிவந்தவாறு காண்க.

பகுதி - இரவுக்குறி. துறை - இரவச்சம் கூறி வரவு விலக்கல். அலங்காரம் - பெயரொடுபெயர் நிரல் நிரை யுவமை. இல்பொருள் உவமையும் உள.)

திங்கள் நீலம் என்பன முறையே முகம் விழி என்ற பெயர்களுக்கும் நீர் அருவி தேன் அருவி மாழைவரை (பொன்மலை) என்பன மறையே முத்துமாலை மணி வடம் முலை ஆகியவற்றுக்கும் உவமைகளாக வந்தமையால், பெயரொடு பெயர் நிரல் நிரையுவமை ஆனது. திங்களில் நீலம் அமைவதும் நீரருவியும் தேனருவியும் தனித்தனியே பெய்யும்

மலையும் எங்கும் இல்லையாதலால், இல்பொருள் உவமையும் உள என்று கூறப்பட்டது.

படுதிரை - உண்டான அலை. பயந்த - பெற்ற. நீலம் - கருங்குவளை. துணைவிழி - இருகண்கள். மன்நீர்மை - நிலைபெற்ற தன்மை. மாழை வரை - பொன்மலை. புரையும் - போன்ற. நித்திலத்தாமம் - முத்துமாலை. மணிவடம் - மாணிக்கமாலை. பண் அமைத்து - அலங்காரம் செய்து. கூற்றுரு நேர்ந்து - யமன்வடிவம் கொண்டு. மாற்றுஉரு - வேறுவேடம். வணர் - வளைந்த. ஐம்பால் - கூந்தல். ஒருவுமின் - நீங்குமின். சேய்த்து - தொலைவில். அணித்துஉறு - அருகில் வருகின்ற. மைந்தர் - ஆடவர். நூபுரம் - காற்சிலம்பு. தையல் பொருட்டு - தையல்காரணமாக. கோடு - தந்தம். பிணர் - சொரசொரப்பு (சருச்சரை). வாரணம் - யானை. குழூஉச்செய் - கூடிய அதர் - வழி. யாமம் - இரவிலே. வெற்பு - மலை. தனிவரல் - தனியாக வாராதே!

தலைவன் இரவில் வந்து தலைவியைக் கலந்து சென்று கொண்டிருந்தான். இரவில் சிங்கங்களும் ஆறலைகள் வரும் உலாவும் வழியாதலால் நீ இரவில் வாராதே என்று தோழி கூறுவதாக அமைந்தமையால் இது இரவச்சம் கூறி வரவு விலக்கல் துறையாயிற்று.

திங்கள் நடுவில் உள்ள நீலம் போன்ற முகமும் கண்களும் நீர் தேன் அருவிகள் பாயும் பொன்மலை போன்று முத்துமாலையும் மாணிக்க வடமும் ஒப்பனை செய்த முலைகளும் கொண்டு கூற்று ஓர் உருக்கொண்டு உயிர் உண்ணும் பொருட்டு மாறுவேடம் பூண்டு வந்தது.

ஆதலால் தூரத்தே விலகிச் செல்க என்று சிலம்புகள் ஒலியெழுப்பும் மெல்லடியையுடைய தலைவியின் பொருட்டு யானை வேட்டைக்குச் சிங்கங்கள் கூடும் சிற்றூர் வழியிலே இரவிலே மாறனுக்கு உரிய மலையிலே தனியே வாராதே என்பது பாடலின் திரண்ட பொருள்.

(தொடரும்)

ஸ்ரீ:

**31.3.2013 ஞாயிற்றுக்கிழமை சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஆண்டுஜெயந்தி விழாவினை முன்னிட்டு நடைபெற்ற 'எனது போர் முறை' என்ற கருத்தரங்கில் "விவேகானந்தர் பார்வையில் மதமாற்றம்" என்னும் தலைப்பில் பாஞ்சஜன்யம் ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர் ஆற்றிய உரை.**

சுவாமி விவேகானந்தர் கலியுகத்தில் தோன்றிய ஓர் அவதார புருஷர். **"யத$_{2}$ா யத$_{3}$ா ஹி த$_{4}$ர்மஸ்ய க்$_{3}$லாநிர் ப$_{4}$வதி ப$_{4}$ாரத| அப்யுத்த$_{2}$ாநமத$_{4}$ர்மஸ்ய தத$_{3}$ாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்||" (கீதை.4-9)** (பரதகுலத்துதித்தவனே! எந்த எந்தக் காலங்களில் அறத்திற்கு வாட்டம் ஏற்படுகிறதோ, அறத்திற்கு எதிரான மறத்திற்கு எழுச்சி ஏற்படுகிறதோ, அந்தந்தக் காலங்களில் நான் என்னையே படைத்துக் கொள்கின்றேன்.) தர்மத்திற்கு வாட்டம் ஏற்படும் போதெல்லாம் தான் அவதரிப்பதாக கீதையில் கண்ணன் கூறுகின்றான். அதை நாம் கருத்தில் கொண்டோமானால் விவேகானந்தரின் செயல்பாடுகள் பற்றிய தெளிவு நமக்கு ஏற்படும்.

உலகில் இதுவரை வாழ்ந்த மாமனிதர்கள் எல்லாம் நமக்கு உணர்த்தி நிற்கின்றதொன்று உண்டு. அது, நாமும் உன்னத வாழ்க்கை வாழலாம் என்பதே. விவேகானந்தர் உலக அரங்கில் இருந்தது என்னவோ பத்து ஆண்டுகளுக்கும் குறைவான காலம்தான்

நரேந்திரர் துறவறம் ஏற்ற நாளிலிருந்து தமக்கென நிலையான ஒரு பெயரை வைத்துக் கொள்ளவில்லை. யாராவது அவர் பெயரைக் கேட்கிறபோது வாய்க்கு வந்த பெயரைச் சொல்லி வந்தார். சிலரிடம் தமது பெயரை சச்சிதானந்தர் என்று கூறிக் கொள்வார். வேறு சிலரிடம் விவிதிஷானந்தர் என்று சொல்லுவார். இப்படி அடிக்கடி பெயரை மாற்றிக் கொண்டே

இருந்தால் உலகப்புகழ் பெற இருக்கின்ற நரேந்திரனை அனைவராலும் அடையாளம் கண்டு கொள்வது கடினமாக இருக்கும். நிலையான பெயரை வைத்துக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது என்று பலர் அவரிடம் கூறி வந்தனர். அரசர் அஜீத்சிங்கினிடத்தில் அளவு கடந்த அன்பு வைத்திருந்த நரேந்திரர் அவர் எந்தப் பெரைச் சூட்டினாலும் அதனையே நிலையாக வைத்துக் கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

“விவேகமும், ஆனந்தமும் ஒருசேர நிறைந்திருக்கும் தங்களுக்கு விவேகானந்தர் என்று பெயரே பொருத்தமானதாக இருக்கும். இனி உங்களை உலகம் விவேகானந்தர் என்றே அறியும்” என்று அஜீத்சிங் அவரிடம் கூறினார். சுவாமி மகிழ்ச்சியுடன் அந்தப் பெயரை ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் தாம் எழுதிய கடிதங்களில் ‘விவேகானந்தர்’ என்றே கையொப்பமிட்டார்.

கேத்ரி மஹாராஜாவினால் சூட்டப்பட்ட விவேகானந்தர் என்ற பெயரே அவருக்கு நின்று நிலைத்துவிட்டது. சுவாமி விவேகானந்தர் என்ற பெயர் இன்று மனித வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த ஒன்றாகி விட்டது. வாழ்க்கையில் எந்த நிலையில் இருப்பவர் ஆயினும், ஒவ்வொருவருக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக, நம்பிக்கை நட்சத்திரமாக அவர் திகழ்கிறார்.

1893, செப்டம்பர் 11ஆம் நாள் சுவாமி விவேகானந்தர் சர்வமத மகாசபையில் உரையாற்றினார். அன்று தொடங்கியது ஒரு புதிய யுகம்! சுமார் நான்கு ஆண்டுகள் அங்கே தங்கி, இந்திய ஆன்மீகத்தின் வெற்றிக் கொடியைப் பறக்கவிட்டார் விவேகானந்தர். அவர் தடம் பதிக்காத துறையே இல்லை என்றே கூறலாம். தத்துவம், மதம், மனஇயல், சமூகஇயல், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வானஇயல், கலை, இசை என்று பேசாத துறை எதுவுமே இல்லை. விவேகானந்த இலக்கியம் ஐந்து அங்கங்களைக் கொண்டது. அவைகளை 1. சொற்பொழிவுகள், 2. கட்டுரைகள், 3. கடிதங்கள், 4. கவிதைகள், 5. உரை யாடல்கள், பேட்டிகள் என்று வகைப்படுத்திடலாம். விவேகானந்த இலக்கியத்தை சென்னை ஸ்ரீராமகிருஷ்ணா மடத்தினர்



‘எழுந்திரு! விழித்திரு!’ என்ற தலைப்பில் பதினொரு பகுதிகளாக வெளியிட்டுள்ளனர். சுவாமி விவேகானந்தரைக் கண்டுபிடித்தது தமிழ்நாடு, குறிப்பாகச் சென்னை என்று நாம் உரிமை கொண்டாட முடியும்.

ஸ்வாமிஜீயின் சென்னை நகரச் சீடர்களில் அவருடைய வாழ்வோடு பின்னிப் பிணைந்து போனவர் அளசிங்கப் பெருமாள். தம் உள்ளத்து உணர்வுகளை எல்லாம் யாரிடமாவது கொட்டித் தீர்த்திருக்கிறார் ஸ்வாமிஜீ என்றால் அது அளசிங்கரிடம் தான். அளசிங்கருக்கு எழுதிய 41 கடிதங்களில் பெரும்பாலான கடிதங்கில் அளசிங்கரை ஏசி எழுதியிருக்கிறார் விவேகானந்தர். அவரது ஏச்சையும் பேச்சையும் கேட்டும் அயராது அவருடைய சீடராக விளங்கியவர் இந்த அளசிங்கர். அவரை, “அளசிங்கா” என்றுதான் அன்புடன் அழைப்பார் ஸ்வாமிஜீ.

பலருடைய எதிர்ப்புகளுக்கு இடையேநடந்த சிகாகோ மாநாட்டில் கிறிஸ்தவ சமயமே உலகின் மிக உயர்ந்த சமயம் என்பதாக நிலைநாட்டப்படும் என்று நம்பிய மாநாட்டுக் கமிட்டியினரின் ஆசையிலும், நம்பிக்கையிலும் மண்ணைப் போட வந்தார் விவேகானந்தர்.

விவேகானந்தருடைய வாழ்நாளிலே இந்தியா சுதந்திரம் அடையவில்லை. அந்நியரின் ஆதிக்கப்பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகும் இந்துக்கள் சுதந்திரத்தின் குறிப்பாக ஆன்மீக விடுதலையைப் பெறவில்லை. மாறாக அவர்கள் நசுக்கப் பட்டு வருகிறார்கள்.

இந்திய நாட்டில் அனைத்து மக்களுக்கும் பொதுவானதொரு வாழ்க்கை நடைமுறைச் சட்டங்கள் இல்லை. உதாரணத்திற்கு கருத்தடை என்பது இந்துக்களுக்கே பொருந்தும். கிறிஸ்தவர்கள் இதை மதிப்பதில்லை. அவர்களுடைய மதகுருமார்கள் கருத்தடை என்பது பைபிளை மீறிய சட்டம் என்று அதை ஏற்றுக் கொள்வதில்லை. முகம்மதியர்களுக்கோ மனைவிகள் பலர் உண்டு. ஒரு முகம்மதியன் ‘தலாக்’ சொல்லி தன் மனைவியை விவாகரத்து செய்து விட்டு இன்னொருத்தியை திருமணம் செய்து

கொள்ளலாம். ஒருவனே பலரை மணந்து கொள்ளலாம். இதன் விளைவு என்னவென்பதைப் பார்ப்போம். 1901ஆம் ஆண்டு இந்து சமூகத்தினரின் மக்கள் தொகை 78 சதவிகிதமாக இருந்தது. முகம்மதியர் மற்றும் கிறிஸ்தவ சமூகத்தினரின் மக்கள் தொகை 22 சதவிகிதமாக இருந்தது. ஆனால் 2061ஆம் ஆண்டு 50 சதவிகிதத்தினர்தான் ஹிந்துக்களாக இருப்பார்கள். மற்றைய 50 சதவிகிதத்தினர் கிறிஸ்தவர்களாகவும், முகம்மதியர்களாகவும் இருப்பார்கள். அந்த ஆண்டு கடந்தும் மைனாரிட்டிகள் என்ற போர்வையில் அனைத்துச் சலுகைகளையும் பெற்று வருவர் அவர்கள்.

இந்தியாவில் இன்று மதமாற்றம் முழுவீச்சில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. வடகிழக்கு மாகாணங்களும், நாகாலாந்தும் கிறிஸ்துவர்கள் பிடியில் சிக்கி தவிக்கின்றன. ஆங்கே எண்பது விழுக்காடு மக்கள் மதமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நகர்ப் புறங்களில் வாழ்வோர் இதன் தாக்கத்தை உணர மாட்டார்கள்.

கடற்கரையோரக் கிராமங்களிலும், கடற்கரையை ஒட்டிய சிறு கிராமங்களிலும் இன்றும் மதமாற்றம் ஏதோஒரு முறையைக் கையாண்டு நடைபெற்று வருகிறது. பஞ்சமும், ஆன்மீக அறிவின்மையும், பொருளாதாரத்தில் பிற்பட்ட நிலையும் உரிய மருத்துவ உதவி அளிக்கப்படாததும், பணமும் மதமாற்றத்திற்கு வித்திடுகின்றன. கோடிக் கணக்கான டாலர்கள் மேலை நாடுகளிலிருந்து இந்தியாவில் உள்ள அரசு சாரா நிர்வாகங்களுக்கும், கிறிஸ்துவ மிஷனரிகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இந்தப் பணத்தைக் கொண்டு முறையற்ற வழிகளில் மதமாற்றத்தில் இன்று கிறிஸ்தவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். ஊடகங்கள் வழி பெருமளவில் கிறிஸ்தவ மதப்பிரசாரம் நடைபெற்று வருகிறது.

இதற்கெல்லாம் அடிப்படை அதிகஅளவில் மதமாற்றத்திற்கு பெறப்படும் தொகையேயாகும். இந்த நாட்டிற்கு வாணிபம் செய்ய வந்த போத்துக்கீசியர், ஸ்பெயின் நாட்டவர்கள், டச்சுக்காரர்கள், ப்ரெஞ்சு நாட்டவர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோர்கள் முழுவீச்சில் மதமாற்றம் செய்வதற்கு உதவி



செய்தனர். ஜனநாயக அரசில் 'மைனாரிட்டி சமூகத்தினர்க்கான சலுகைகள்' என்ற போர்வையில் இந்துக்கள் துன்புறுத்தப் படுகின்றனர். மதமாற்றத்தில் எவ்விதத் தயக்கமுமின்றி கிறிஸ்தவர்கள் ஈடுபட்டு வருவது கண்கூடு.

இந்துக்களைப் பொறுத்தவரையில் இந்நாட்டின் உயிர்நாடி, சமயமும் அவர்களது ஆன்மிக சுதந்திரமும்தான். போர்த்துக்கீசியர்கள் இந்துக்களை மதரீதியாக பகைத்துக் கொண்டதால் நிலைகொள்ள இயலவில்லை. ஆனால் ஆங்கிலேயர்கள் இந்துக்களின் சமய உணர்வுகளை மதிப்பது போல நடித்தே நமது தேசத்தில் நிலை கொண்டனர்.

**இனி அமெரிக்காவில் சில ஆண்டுகள் தங்கியிருந்து பாரத நாட்டின் பெருமையை உலகறியப் பறைசாற்றிய விவேகானந்தர் கிறிஸ்தவ மதமாற்றத்தை எவ்வாறு கண்டித்தார் என்பதைக் காண்போம்.**

Cyclonic Hindu Monk என்று அடியில் எழுதப் பெற்ற அவருடைய கம்பீரமான உருவப் படங்கள் சிகாகோ நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒட்டப்பட்டன. மக்களை எல்லாம் பாவிகள் என்று கூறும் மதத்தில் பிறந்த அவர்களுக்குத் தாங்கள் பாவிகள் அல்லவென்றும், அமரத்துவம் வாய்ந்தவர்கள் என்றும், அழியாப் பரம்பொருளின் அன்புக் குழந்தைகள் என்றும் விவேகானந்தரின் வாயிலிருந்து கேட்டு அறிந்தது ஓர் ஆனந்த அனுபவமாக இருந்தது.

செப்டம்பர் 19-ம் தேதியன்று விவேகானந்தர் அவர்கள் இந்து தர்மம் பற்றி விரிவான உரையொன்று நிகழ்த்தினார். செப்டம்பர் 20-ந் தேதி நிகழ்த்திய உரையில், "பாரத நாட்டில் பஞ்சகாலத்தில் ஆயிரக்கணக்கான ஏழைகள் இறந்தனர். ஆனால் உங்களது கிறிஸ்தவப் பாதிரிகள் அவர்களுக்காக ஒன்றுமே செய்யவில்லை. அந்தப் பாதிரிகள் எங்கள் நாடு முழுவதும் சர்ச்சுகளைக் கட்டுவதில் மும்முரமாக இருக்கிறார்கள். கிறிஸ்தவ நாடுகளிடமிருந்து பாரதம் எதிர் நோக்குவது மதம் அல்ல. அவர்களுக்குத் தேவை உணவு, உடை, பொருளாதார முன்னேற்றதத்திற்கான வழிமுறைகள். ஆனால் உங்கள்

பாதிரிகள் எதையும் அவர்களது மதத்திற்குப் பேரம் பேசுகி றார்கள். இது கண்டிக்கத்தக்கது.

நான் சிறுவனாயிருந்தபோது கிறிஸ்தவப் பாதிரி ஒருவர் ஒரு கூட்டத்தில் பிரசாரம் செய்து கொண்டிருந்த நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. பல செய்திகளைச்சொல்லிக் கொண்டே வந்த அவர் இடையில், நான் உங்கள் விக்ரஹத்தை என் கைத்தடியால் ஓங்கி அடித்தால் அது என்னை என்ன செய்து விடும்? என்று கேட்டார். அதனைக் கேட்டுக் கொண்டிருந்த வர்களுள் ஒருவர் சற்றும் தாமதிக்காமல் "உங்கள் ஆண்டவரை நான் ஏசினால் அவர் என்னை என்ன செய்வார்?" என்று கேட்டார். "இறந்ததும் நீ தண்டிக்கப்படுவாய்" என்று பதிலளித்தார் பாதிரி. "அப்படியே எங்கள் விக்ரஹமும் நீர் இறந்ததும் உம்மைத் தண்டிக்கும்" என்று திருப்பிச் சொன்னார் அந்த இந்து.

விவேகானந்தரின் சொற்பொழிவுகளைப் பற்றி எழுதிய சிகாகோ நகர நாளேடுகள் விவேகானந்தரின் ஆன்மிக உரைகளைக் கேட்டபிறகு இங்கிருந்து பாரதத்திற்கு மதத்தைப் போதிக்கப் பாதிரிகளை அனுப்புவது எத்துனை அறியாமை, எத்தனை முட்டாள்தனம் என்பது தெளிவாகிறது என்று எழுதியது. அப்போது அமெரிக்காவில் இருநூறுக்கும் மேற்பட்டக் கிறிஸ்தவப் பிரிவுகள் இருந்தன. இந்த பிரிவுகளைச் சேர்ந்த இருநூறு ஆயிரம் சங்கங்கள் உலகெங்கும் கிறிஸ்தவத்தைப் பரப்பும் பணியில் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான டாலர்கள் பணத்தைச் செலவழித்து வந்தனர்.

இவ்வியக்கங்கள் ஆசியா விலும், ஆஃபிரிக்காவிலும் கோடிக்கணக்கான டாலர்களை செலவழித்து பாவிகளைக் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாற்ற முயற்சித்து கொண்டிருந்தபோது, அமெரிக்காவில் 46 சதவீதத்திற்குக் குறைவான மக்களே கிறிஸ்தவ மதத்தின் ஏதேனும் ஒருபிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதாகக் கூறி கொண்டனர். மற்றவர்கள் கிறிஸ்தவ மதத்தின் எந்த உட்பிரிவிற்கும் சம்பந்தப்படாமல் பணம் ஒன்றையே வழிபடும் மக்களாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.



'கிறிஸ்தவ விஞ்ஞானம்' என்ற பெயரில் பாரதீய வேதாந்தக் கருத்துக்களை பைபிளில் புகுத்திப் புதிய சித்தாந்தத்தினை ஏற்படுத்திய பிரிவும் அப்போது இருந்தது. மந்திர தந்திரங்கள் மூலம் நோய்களை குணப்படுத்துவதற்காக ஒரு சமயப் பிரிவு நன்கு வளர்ந்து பிரபலமடைந்து இருந்தது. இதில் 1000 சர்ச்சுகள் அக்காலத்தில் இருந்தன. (இன்றும் இந்திய வழிபாட்டு முறைகளை பின்பற்றி பல புதிய சர்ச்சுகளைக் கட்டி வருகின்றனர். இந்துக் கோயில்களில் மேற்கொள்ளப்படும் பூஜை முறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்துக்களின் ஆகம நூல்களின் அடிப்படையில் கட்டி வரும் கோயில்களைப் போன்று சர்ச்சுகளை கட்டி வருகின்றனர். இவ்வாறாக மக்கள் மனத்திலே ஏசுவும், கிருஷ்ணனும் ஒன்றே என்ற விஷ விதையை ஊன்றி வருகின்றனர். திருவரங்கம் போன்ற புனித நகர்களில் ஊரின் வெளிப்புறத்தில் பல ஜப வீடுகளை அமைத்து, பாவிகளே! உங்களை சாத்தான் பிடித்திருக்கிறது. விக்ரஹ வழிபாட்டில் ஈடுபடாதீர்கள். இயேசு மீண்டும் பிறக்கப் போகிறார். கண் தெரியாதவர்கள் கண்ணொளி பெறுவர். முடவன் எழுந்து ஓடுவான். காது கேளாதவர்களுக்கு காது கேட்கும். தேவைப்பட்டால் உங்கள் வீட்டில் வந்து ஜபம் செய்வோம் என்றெல்லாம் மூலை முடுக்குகளில் நின்று கொண்டு ப்ரசாரம் செய்கின்றனர். இத்தகைய தருணத்தில் பல விவேகானந்தர்கள் தோன்ற வேண்டும். பல ஆன்மீக வீரர்களை உருவாக்க வேண்டும். இந்து சமயத்தின் பெருமையை நாடெங்கும் பரப்ப வேண்டும்.)

மக்களை வாழ்வின் உயர்நிலைக்கு அழைத்துச் செல்வதாக பாரத நாட்டில் மதப்பிரச்சாரம் செய்து வந்த கிறிஸ்தவர்களால், எதியோப்பியர்களையும், அபிஸீனியர்களையும் அவர்களால் ஏன் உயர்த்த முடியவில்லை?" என்று கேள்வி கேட்டுக் கிறிஸ்தவப் பாதிரிகளைச் சாடினார். ஸர்வமத மாஹாசபையில் செப். 19-ம் நாள் அவர் பேசியதாவது. "கீழை நாடுகளிலிருந்து வந்துள்ள நாங்கள் இங்கே தினமும் ஒரு கருத்தைக் கேட்கிறோம். நாங்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்ற தொனியில் அது இங்கே கூறப்படுகிறது. அந்தக்

கருத்து என்ன தெரியுமா? நாங்கள் எல்லோரும் கிறிஸ்தவ மதத்தவர்களாக மதம் மாற வேண்டும் என்பதுதான் அது. ஏனெனில் எங்கள் வறுமை நீங்கி நாங்கள் செல்வந்தர்களாக அது ஒன்றே வழி.''

கிறிஸ்தவ நாடுகள் பணக்கார நாடுகளாக உள்ளன என்பது உண்மைதான். ஆனால் கிறிஸ்தவ நாடுகளிடம் இந்தச் செல்வம் எப்படிக் குவிந்தது? இங்கிலாந்து பணக்கார நாடாக இருப்பதற்குக் காரணம் ஆசியாக்கண்டத்து மக்களைச் சுரண்டிச் சேர்த்த செல்வத்தால் தான். ஐரோப்பாவின் செல்வம் ஸ்பெயினும், போர்ச்சுக்கலும் உலகைக் கொள்ளையடித்துக் கொண்டு வந்தது. மெக்ஸிகோவும், பெருவும் ஸ்பெயின் தேசத்தவர்களால் எங்ஙனம் சூறையாடப்பட்டது என்பது இன்றைக்கு வரலாறாக நம் கண்முன் நிற்கிறது.

சக மனிதர்களைக் கொன்று பிறதேசங்களைச் சூறையாடிச் செல்வம் குவிக்க ஒருபோதும் இந்துக்கள் விரும்பமாட்டார்கள். அமெரிக்கர்களின் பெரும்பாலோரின் காதுகளையே எட்டாத ரகசியக் குரலாக இருந்த வேதாந்தத்தை, விவேகானந்தர் எடுத்துச் சொன்னவுடனேயே அமெரிக்காவில் அதற்கொரு மகத்தான வரவேற்பு ஏற்பட்டு விட்டது. வளமான மண்ணில் விதைத்த விதைகள் போல அமெரிக்க மக்களின் உள்ளத்தில் விவேகானந்தரின் வார்த்தைகள் நன்கு பதிந்தன.

பாரதம் ஓர் அநாகரிக நாடு, பாரத மக்களின் ஹிந்து மதம் ஓர் அநாகரிக மதம் என்றெண்ணி பாரத மக்களைக் கடைத்தேற்றுகிறோம் என்று எண்ணி கிறிஸ்தவ மிஷனரிகளை அனுப்பி வைத்த அமெரிக் கிறிஸ்தவ மக்களின் கண்களைத் திறந்து வைத்தது விவேகானந்தரின் அந்தச் சொற்பொழிவு. பாரதத்துக்குக் கற்பிக்கத் தங்களிடம் ஏதுமில்லை, மாறாக அதனிடமிருந்து தாங்கள் கற்க வேண்டியது ஏராளம் என்று அவர்கள் புரிந்து கொள்ளத் தலைப்பட்டனர். அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான நியூயார்க் ஹெரால்டு "விவேகானந்தர்தான் ஸர்வ சமய மாநாட்டின் மிக உயர்ந்த சமயத் தலைவராகத் திகழ்ந்தார்'' என்று எழுதியது.



இதையெல்லாம் பார்த்துப் பொறாமை கொண்ட கிறிஸ்தவ மிஷனரிகள் ஸர்வ சமய மாநாட்டில் பொய்ச் சரக்குகளை அவிழ்த்துவிடத் தொடங்கினர். பாதிரி ஹ்யூம் என்பவர் சென்னை மாநகரில் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்றும 1871 - 1881 மக்கட்தொகை கணக்குப்படி ஜனத்தொகை 6 சதவீதம் உயர்ந்தபோது, கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை 32 சதவீதம் உயர்ந்ததாகவும், 1881 - 1889 கணக்குப்படி ஜனத் தொகை 10 சதவீதம் உயர்ந்த போது, கிறிஸ்தவர் மக்கட்தொகை 33 சதவீதம் உயர்ந்ததாகவும், இந்த ரீதியில் சென்றால ஒரு தலைமுறைக்குள் மிக உயர்ந்த பொறுப்புகளும், அதிகாரங்களும் கிறிஸ்தவர்கள் கையிலேயே இருக்குமெனவும் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு கூறினார்.(கி.பி. 1523ஆம் ஆண்டு முதல் கி.பி. 1947 ஆம் ஆண்டு வரை கிறிஸ்தவர்கள் நம் நாட்டை சூறையாடியதோடு மட்டுமல்லாமல் இந்திய நாட்டின் பண்பாடு, கலாச்சாரம், ஆகியவற்றை திட்டமிட்டே சிதைத்து வந்தனர். சுதந்திரம் அடைந்த பிறகு மைனாரிட்டிகள் என்ற பெயரில் பல சலுகைகளைப் பெற்றுவரும் கிறிஸ்தவர்களும், முகம்மதியர் களும் தங்கள் எண்ணிக்கையை உயர்த்தி வருகின்றனர். அன்று அமெரிக்காவில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் பேசியதை இன்று நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

"கிறிஸ்தவ மிஷனரிகள் பாரதத்திற்கு வந்து, மனிதர் களுக்குத் தொண்டு செய்கிறோம்'' என்று பசப்புவதெல்லாம் இந்துக்களைத் தங்கள் முன்னோர்களின் பாரம்பர்யம் மிக்க மதத்தை விட்டுவிட்டு கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுவதற்குத் தான் என்று ஸர்வ மத மாநாட்டில் விவேகானந்தர் கூறியதை ஆதரித்துப் பேசிய பிஷப் கீனே (Bishop Keane) என்பவர்.

"நான் விவேகானந்தர் கூறியதை முற்றிலும் ஆமோதிக்கிறேன். பசியோடு இருக்கும் இந்துக்களுக்கு பாசாங்கு தொண்டு புரியும் கிறிஸ்தவ மிஷனரிகள் அப்பசித்த இந்துக்களின் மன சாட்சியை மடிய வைத்து தம் மதத்திற்கு இழுக்கின்றனர். கிறிஸ்தவ மிஷனரிகளின் இந்த இழிவான செயல் கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் அத்தனை பேரும் வெட்கி தலை குனிய வேண்டிய ஒன்றாகும்'' என்று அடித்துப் பேசினார்.

ஸர்வமத மஹாசபையின் மூலம் கிறிஸ்தவ மதத்தின் மேன்மையை உலகிற்கு அறியச் செய்ய வேண்டும் என்று விரும்பியர்கள் விவேகானந்தர் மற்றும் கீழை நாட்டு மதப் பிரதிநிதிகளின் பங்களிப்பால் தங்கள் நோக்கம் நிறைவேறாதது கண்டு ஆத்திரம் அடைந்தார்கள். விவேகானந்தர் இரு கரமும் நீட்டி வரவேற்ற அமெரிக்கர்கள் கிறிஸ்தவ மிஷனரிகளை ஓரளவிற்கு ஒதுக்கினார்கள் என்றே சொல்ல வேண்டும். பாரத சமுதாயத்தையும், இந்து மதத்தையும் பல பொய்களைக் கூறி மிகவும் இழிவாகச் சித்தரித்திருந்த கிறிஸ்தவ மிஷனரிகளைத் தோல் உரித்துக் காட்டி இந்துக்களைப் பற்றிய உண்மைகளை அமெரிக்கர்கள் உணரும்படிச் செய்தார் விவேகானந்தர். இதன் விளைவாக கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு அமெரிக்கர்கள் கொடுத்து வந்த பணமும் குறைய தொடங்கியது. (ஆனால் தற்போது ஜெர்மனி, United Kingdom, Netharland, France போன்ற நாடுகளிலிருந்து கோடிக்கணக்கான டாலர்கள் இந்தியாவில் மத மாற்றத்திற்காக அரசு சாரா நிறுவனங்களுக்கும் கிறிஸ்துவ மிஷனரிகளுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது.

“விவேகானந்தர் தமது சொற்பொழிவுகளின் மூலம் கிறிஸ்தவ மதவெறியின் முதுகெலும்பை முற்றிலுமாக ஒடிக்கவில்லை என்றாலும். கிறிஸ்தவ மிஷனரிகள் மீது சம்மட்டியால் ஓங்கி அடித்தார். அதன் வலியை அவர்கள் உணரத் தலைப்பட்டார்கள்” என்கிறார் மேரி லூயிபர்க் என்பவர். சிகாகோவில் நடைபெற்ற உலக மத மாநாடு இந்துக்களின் உயர்வையும், இந்து மதத்தின் பெருமையையும் அமெரிக்கர்களுக்கு எடுத்துக்காட்டியது. மாநாட்டில் விவேகானந்தர் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தாக்கம் அமெரிக்கர்களிடையே ஒரு மனமாற்றத்தை உண்டாக்கியது.

கல்கத்தாவில் தனது வாலிபப் பருவத்தில் கிறிஸ்தவ மிஷனரிகளுடன் மோதியவர் சுவாமி விவேகானந்தர். அந்தக் காலகட்டத்தில் சாலை சந்திப்புகளிலும், சந்தைகளிலும், பொது இடங்களிலும் கூட்டம் போட்டு இந்து தெய்வங்களைப் பழித்து வந்தனர் கிறிஸ்தவ மிஷனரிகள். வராஹநகர் மடத்தில் தமது சஹோதரத் துறவியர்களுடன் வாழ்ந்த காலத்தில் இந்தக் கிறிஸ்தவ மிஷனரிகளை விவேகானந்தர் எதிர்கொள்ள நேர்ந்தது.



வராஹநகர் மடத்திற்கே வந்து ராமகிருஷ்ணரின் சீடர்களை தங்கள் வலையில் சிக்க வைக்க முயன்றனர் சில கிறிஸ்தவ மிஷனரிகள். தங்களுக்குக் கிறிஸ்தவ மதத்தின் பெருமையைக் கூற வந்த மிஷனரிகளிடம் கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளைக் கூறத்தொடங்கினார் விவேகானந்தர். எந்த விதத்திலும் கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள் வேதாந்தக் கோட்பாடுகளைவிட உயர்ந்தவை அல்ல என்பதை நிரூபித்தார்.

ராமகிருஷ்ணரது சீடர்களிடம் தங்கள் முயற்சி தோல்வியுற்றதைப் புரிந்து கொண்ட அந்த மிஷனரிகள் பணம் தருவதாகக் கூறி கிறிஸ்தவ மதத்திற்கு வந்து விடுமாறு ஆசை காட்டினார். அதற்கும் இந்த இளம் துறவிகள் மசியவில்லை என்பதைக் கண்டு பெண்களைக் கூடத் தருவதாகக் கூறி ஆசை காட்டினர். காமமும் பணத்தாசையும் துறவிக்கு துச்சமே என்பதை உணர்த்தினார் விவேகானந்தர். அவர்களது இழிவான செயலை அந்த மிஷனரிகளுக்கு எடுத்துக்கூறி அவர்களை வந்த வழியே திரும்பிச் செல்லும்படி அறிவுறுத்தினார். தங்களது அனைத்து முயற்சிகளும் தோற்றுப் போனதால் மிஷனரிகள் பின்வாங்கினர். (இன்று ஒருசில இந்துக்களுக்கு பெருமளவில் பணம் கொடுத்து, அவர்களைக் கொண்டு ஏன் அவர்கள் கிறிஸ்தவ மதத்தை தழுவினார்கள் என்பதை கற்பனை கலந்த கதையாக வெளியிட்டும் ஏசுவை அவர்கள் நேரில் கண்டதாகவும், கயிறு திரித்தும் மக்கள் மனதை மாற்ற முயல்கிறார்கள் கிறிஸ்தவர்கள்.)

ஸர்வ மத மஹாசபையில் செப்டம்பர் 25-ம் நாள் ஜார்ஜ் டி பெண்டகோஸ்த் என்ற பாதிரி இந்து மதத்தை மிகவும் இழிவாக விமர்சித்தார். பாதிரிகளுக்கும், அமெரிக்க கிறிஸ்தவர் களுக்கும் இந்து மதத்தைப் பற்றி எதுவும் தெரியாமலே அவர்கள் பொய் அவதூறுகளைப் பரப்புவது முட்டாள்தனமானது என்று காட்ட விரும்பினார் விவேகானந்தர். எனவே மாநாட்டில் தமது உரையை நிறுத்திவிட்டு இடையே மக்களை நோக்கிக் கேள்விக் கணை ஒன்றைத் தொடுத்தார்.

“நீங்கள் இந்துக்களின் சமய நூல்கள் எதையாவது படித்திருக்கிறீர்களா? அவை என்ன சொல்கின்றன என்பதை

பற்றி உங்களுக்கு நேரடியான அறிவு ஏதாவது உண்டா? அப்படிப் படித்தவர்கள் யாராவது இருந்தால் கை தூக்குங்கள்.'' மூன்றோ, நான்கோ கைகள் மட்டுமே உயர்ந்தன. "எங்கள் சமய நூல்கள் எதையும் படிக்காமலேயே எங்களை மிகக் கேவலமாக விமர்சிக்கத் துணியும் உங்கள் முட்டாள்தனத்தை என்னென்பது?'' இவ்வாறு கிறிஸ்தவ நாட்டில் கிறிஸ்தவர்களைப் பார்த்து கம்பீரமாகக் கேட்டார் இந்த இந்து மதக் காவலர்.

ஹெட்லாண்டு தமது உரையில் குறிப்பிட்ட பல செய்திகளை விமர்சித்தார் விவேகானந்தர். சீனாவில் நிலவும் ஏழ்மையைக் குறிப்பிட்ட விவேகானந்தர். கிறிஸ்தவ மிஷனரிகள் சீனர்களின் பசியைப் போக்க, அவர்களது மதத்தை விலை பேசுகின்றனர். தொன்மையான சீனர்களது சமயத்தை உதறி விட்டு கிறிஸ்தவத்தை ஏற்குமாறு கட்டாயப் படுத்துகின்றனர்.

இதைப்போலவேதான் பாரதத்திலும் கிறிஸ்தவ மிஷனரிகள் செயல்படுகிறார்கள். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களின் ஆன்மாக்களைக் காக்கிறோம் என்ற பெயரில் இந்துக்கள் காலங்காலமாகக் கொண்டிருந்த நம்பிக்கைகளைக் கைவிட்டு கிறிஸ்தவர்களாக மாற வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் பஞ்சத்தால், பசியால் துடிக்கும் இந்துக்களுக்குச் சோறு தருகிறேன் என்கிறார்கள். எங்கள் நாட்டில் எழுப்பப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான சர்ச்சுக்கள் இந்துக்களின் உதவியால் எழுப்பப்பட்டவை. ஆனால் எந்த ஒரு இந்துக் கோயிலுக்கும் கிறிஸ்தவர்கள் தம்படி காசு கூடத் தருவதில்லை. ஒரு கிறிஸ்தவர் அல்லாதவருக்கு கிறிஸ்தவர் களிடம் இருந்து உதவி கிடைக்காது என்பது நமக்கு தெரியும் என்று கூறிய போது அவரது உரையை மக்கள் உற்சாகத்துடன் கேட்டனர். யேசுவின் ரத்தம் பாவங்களை சுத்திகரிக்கும் என்று கிறிஸ்தவர்கள் சொல்வதைக் கேட்டிருப்போம். இது பற்றி விவேகானந்தர் சொல்வதைக் கேட்போமா?

இந்து ஒருவன் கருங்கல்லைத் தொழுகிறான் என்று அடிக்கடி சொல்கிறார்கள் இந்த மிஷனரிகள். ஆனாலும் இப்படி இந்துவின் மனம் புண்படும்படி பேசும் கிறிஸ்தவ மிஷனரிகளைக் குறித்து இந்துவின் சிந்தனை என்ன தெரியுமா? "பாவம்!



குழந்தைகள் அவர்கள். பௌதீக விஞ்ஞா னத்தில் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் (மேலை நாட்டுக் கிறிஸ்தவர்கள்) பெரியவர்களாக இருக்கலாம். என்றாலும் சமயத் துறையில் நீங்கள் சிறுகுழந்தைகளே'' என்று புன்முறுவலுடன் சொல்லிவிட்டுச் சென்று விடுவான். இததான் இந்துவின் இயல்பு.

'நீங்கள் பயிற்சி அளித்து கல்வி கற்பித்து, உடுக்க உடை தந்து சம்பளமும் தந்து அனுப்பும் கிறிஸ்தவ மிஷனரிகள் எங்கள் நாட்டுக்கு வந்து என்னுடைய முன்னோர்களையும், என் சமயத்தையும் இழித்தும், பழித்தும், ஏசியும் வருகிறார்கள். இந்துக்களாகிய எங்களது கோயில் அருகே நின்று கொண்டு, இந்துக்களைப் பார்த்து பாவிகளே! நீங்கள் விக்ரஹங்களைத் தொழுகிறீர்கள். ஆகவே நீங்கள் நரகத்துக்குப் போவீர்கள் என்று சொல்கிறீர்கள்.'

ஆனால் அதே மிஷனரிகள் எங்கள் தேசத்து முஸ்லீம் களிடம் சென்று, அவ்வாறு சொல்வதில்லை. சொல்வதற்கான தைரியமும் இல்லை. ஏனெனில் அவ்வாறு சொன்னால், அந்த முஸ்லீம்கள் வாளை உருவிக் கொல்வார்கள். ஆனால் இந்த இந்துவோ மிகவும் சாந்தமானவன். இந்த மூடர்கள் பேசிவிட்டுப் போகட்டும் என்று அப்பால் சென்று விடுவான். "உங்கள் பாதிரிமார்கள் எங்கள் மீது வாரித்தூற்றும் புழுதிக்கு பதிலடியாக எல்லா இந்துக்களும் எழுந்து நின்று இந்து மஹா சமுத்திரத்தின் அடியிலுள்ள எல்லா சேற்றையும் எடுத்து உங்கள் மீது வீசி எறிவார்களானால் அவ்வாறு எறிவதால் ஏற்படும் தீமையானது நீங்கள் எங்களுக்குச் செய்து கொண்டு வரும் தீமையில் ஒரு சிறு அளவுகூட இராது.'' எதற்காக நீங்கள் இப்படி புழுதிவாரித் தூற்றுகிறீர்கள்? உலகத்திலுள்ள எவரையாவது எங்கள் மதத்தில் கொண்டு சேர்ப்பதற்கு ஏதாவது ஒரு மிஷனரியை நாங்கள் எப்பொழுதாவது அனுப்பியுள்ளோமோ?

ஒரு கையில் பைபிளும் மறுகையில் வாளும் ஏந்தி நீங்கள் மக்களை அச்சுறுத்தி மதம் மாற்றுகிறீர்கள். உங்களிடம் உள்ளதோ நேற்று முளைத்த மதம். கத்தி இல்லாமல் உங்கள் கிறிஸ்தவ மதம் எவ்விடத்தில் வெற்றிப் பெற்றுள்ளது? உலகம் முழுவதிலும் ஓர் இடத்தையாவது காட்டுங்கள். கிறிஸ்தவ சமய

வரலாற்றில் ஏதேனும் ஓர் இடத்தைக் காட்டுங்கள். ஒரே ஒரு இடம் என்கிறேன். இரண்டு இடத்தைக் காட்ட சொல்லவில்லை.

உங்கள் முன்னோர்கள் எவ்வாறு மதம் மாற்றப் பட்டார்கள் என்பதை நான் அறியேன். ஒன்று அவர்கள் பலாத்காரமாக மதம் மாற்றப்பட்டார்கள். மதம்மாற மறுத்தவர்கள் கொல்லப்பட்டார்கள். முஸ்லீம் மதத்திலும் இதே கதைதான். மூஸ்லீம்கள் நாங்களே மேலானவர்கள் என்று சொல்கிறார்கள். ஏன் தெரியுமா? ஏனெனில் அவர்கள் மற்றவர்களைக் கொல்லும் திறம் பெற்றவர்கள். ஸமதானம் செய்கிறவர்கள் புண்ணிய வான்கள். அவர்கள் இம்மண்ணுலகத்தில் இன்புற்று வாழ்வார்கள் என்பன போன்ற பைபிள் வார்த்தைகள் தவிடு பொடியாகிவிட்டன.

கிறிஸ்தவர்கள் ஒரு புதிய நாட்டிற்குப் போனபோது அங்குள்ள குடிமக்களை அழித்ததைப் போல இந்துக்கள் எந்த மக்களையும் அழிக்க முயலவில்லை. அந்த மக்களைப் பண்படுத்தினார்கள். கிறிஸ்தவ மதத்தோடு ஸ்பானிஷ் தேசத்தார் இலங்கைக்கு வந்தனர். அங்குள்ள மக்களைக் கொன்று குவித்து அவர்களது தெய்வ உருவங்கள் நிறைந்த கோயில்களை அழித்துவிடுமாறு தங்கள் கடவுளானவர் கட்டளை இட்டுள்ளதாகக் கூறினர்.

பௌத்தர்கள் புனிதமானதாகக் கருதி வழிபட்டு வந்த பகவான் புத்தருடைய பல்லைக் கடலில் எறிந்துவிட்டு ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று ஒருசில மக்களை மதம் மாற்றினார்கள்.மேற்கு பாரதத்திற்குப் போர்த்துகீசியர் வந்தனர். இந்துக்கள் மும்மூர்த்திகளை நம்பி வழிபடுகின்றனர். அந்தப் புனித நம்பிக்கைக்கு ஏற்ப ஒரு கோயிலும் கட்டி வைத்திருந்தனர். படை எடுத்து வந்த போர்த்துகீசிய கிறிஸ்தவர்கள் அது சைத்தானுடைய வேலை என்று கூறினர்.

வியக்கத்தக்க அந்தக் கோயிலை பீரங்கி கொண்டு தாக்கி அதன் ஒருபகுதியை அழித்தனர். "சினம் கொண்ட எழுந்த மக்கள் படையெடுத்து வந்தவர்களை நாட்டை விட்டுத் துரத்திவிட்டனர். ஆரம்பத்தி லேயே வந்திருந்த பாதிரிமார்



நாட்டைக் கைப்பற்ற முயன்றனர். தமக்கு என ஒரு நிலையான ஆதார இடத்தை வற்புறுத்திப் பெற அவர்கள் முயன்ற போத பலரைக் கொன்றார்கள். ஒரு சிலரை மதம் மாற்றினார்கள். தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மக்களுள் சிலர் கிறிஸ்தவராயினார். உயர் கல்வி அளிப்பதாயும், பணியில் அமர்த்துவதாயும் கூறி பல இந்துக்களை மதம்மாறச் செய்தனர். போர்த்துகீசியருக்கு அஞ்சிக் கிறிஸ்தவர்கள் ஆனவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றுறொன்பது பேர் அவ்வாறு உயிருக்கு அஞ்சி மதம் மாறியவர்களே."

"நாங்கள் கிறிஸ்தவ மதத்தை விரும்பி ஏற்கவில்லை. நாங்கள் கிறிஸ்தவர்கள் என்பதாக சொல்லிக் கொள்ளும்படி வற்புறுத்தப் பட்டோம். அந்த வற்புறுத்தலுக்கு அடிபணிந்து கிறிஸ்தவர்களாகி விட்டோம்" என்றுதான் அவர்கள் கூறினார்கள்."

"பாதிரிமார்களது ஆதரவை நாடி அவர்களால் ஒருவாறு வாழ்க்கை நடத்தி வருகிற ஒரு சிலரே மதம் மாறுகிறார்கள். மற்றவர்கள் பாதிரிகள் தரும் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் மதம் மாறுவதில்லை. கிறிஸ்தவர் களால் ஏன் யூதர்களை மதமாற்றம் செய்ய இயலவில்லை? அவர்கள் ஏன் பார்சி மதத்தினரை மதமாற்றம் செய்ய இயலவில்லை? சைனாவிலும் முகமதியர்கள் மிகமிகக் கொடிய முறைகளைக்க கையாண்டார்கள். இப்போது கிறிஸ்தவர்கள் கையாளுகிறார்கள்."

"கிறிஸ்தவ நாடுகள் கொலை செய்து புதிய இடங்களைக் கைப்பற்றுவதாக நீங்கள் தினந்தோறும் பத்திரிகைகளில் படிக்கிறீர்கள் இதைக் கண்டித்து எந்தப் பாதிரியாவது பிரசாரம் செய்கிறாரா? ஏன் இந்த ரத்தவெறி? ரத்தவெறி அதிகம் கொண்ட கிறிஸ்தவ நாடுகள் கிறிஸ்தவ மதத்தை கருணை மதம் என்று எதற்காகப் பெருமை பாராட்டிக் கொள்ள வேண்டும்."

பாரதத்திலே கிறிஸ்தவர்களைத் தராசில் போட்டு நிறுத்துப்பார்த்தாகிவிட்டது. அவர்கள் வெறும் பதர்களே, உலகத்தின் ஒரு சிறு பகுதியை மதமாற்றம் செய்வதற்குள்ளே

கிறிஸ்தவ மதமானது பல பிரிவுகளாக பிரிந்து போய்விட்டது. இங்கும், அங்கும் சென்று பிறரை மதம் மாறச் செய்து பிறருடைய ஆன்மாவைக் காப்பாற்ற முனைகிறோம் என்ற பெயரில் அலைந்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவ மிஷனரிகள் தங்கள் ஆன்மா கடைத்தேற வேண்டும் என்பதை மறந்து விடுகின்றனர். பாதிரிகள் உலகோரிடம் கூறுவது போல நாம் பிசாசுகளுமல்ல. அது போலவே அவர்கள் தங்களைப் பற்றி பெருமை யடித்துக்கொள்வது போல அவர்கள் தேவதூதர்களும் அல்ல.

In an interview to the editor of Prabuddha Bharata, in which Swami Vivekananda stated that arrangements must be made to receive back into Hinduism those who had been converted to Christiantity and Islam.According to Swami Vivekananda"**Every man going out of the Hindu pale(fold) is not only a man less but an enemy more**" - Vol V PP 233-235. In the book 'Swami Vivekananda in the west - New discoveries' by Marie Louise Burke it is mentioned that it was remarked by **Swami Vivekananda that the English used three 'B's, Bible, Brandy and Bayonets in Civilizing India.Vol .II**

He always spoke with Pride of his people and his country. Indeed Swamiji was the first to present India in her true light to the west. As he himself wrote to Alasingha "**I am the one man who dared to defend his country and I have given them what they never expected from a Hindu.**" Complete works 5:81; found in swamy's original letter of RKM Belur.

Marie Louise Burke in her book 'Swami Vivekananda in America New Discoveries' had given certain clarification on Swami Vivekanand's attitude towards Christianity. In an earlier chapter I have tried to present Swamiji's position in relation to the activities of the Christian Missionaries in India and I neednot repeat here myself but this is as good a place on any, to clarify certain points left undiscussed.

The common reader of Swami Vivekananda may have noticed that an apparent contradiction exists between Swamiji's main thesis and his invitation to" hundreds and thousands of missionaries of christ" We want missionaries of christ, Let such come to India by the hundreds and thousands.

What does he mean? He made a clear distinction between Christianity and Christian Missionaries in many places. Churchianity of organised religions is different from Christianity ( here the term Christians has been used by Swamy Vivekananda to refer to Good samaritans and not the Church people who aim to convert the masses of other religions). Christianity the term here refers to "The mental approach to people of other religions" by Christians.

**ஆதாரநூல்கள்:**


1. விவேகானந்தர் பாதையிலே, ஆசிரியர். ஆர்.பி.வி.எஸ். மணியன், வெளியீடு: விவேக பாரதி, சென்னை 17.

2. எழுந்திரு! விழித்திரு! 11 பகுதிகள், வெளியீடு. ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர் சென்னை 600 004.

3. இளைய பாரதமே எழுக! விவேகானந்தரின் சென்னை சொற்பொழிவுகள், வெளியீடு. ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர் சென்னை 600 004.

4. Complete works of Swami Vivekananda Advaitha Ashram - Vol I to IX

5. Swami Vivekananda in the West - New Discoveries - I to VI Volumes. by Marie Louise Burke.

6. 'Demography of Religions Populations in India' by A.P. Joshi, M.D. Srinivas, A.P. Bajaj.


***

ஸ்ரீ:

**மாறன் மலரடி வாழ்க!**

## தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் மெய்யியல் துறையின் ஆதரவில் 18.3.2013 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் பாஞ்சஜன்யம் இதழ் ஆசிரியர் அ. கிருஷ்ணமாசார்யர்.

## ''அகஇலக்கியக்கோட்பாடுகளும், நாலாயிர திவ்யப்பிரபந்தமும்'' என்ற தலைப்பில் ஆற்றிய உரை

அனைத்து மொழிகளிலும் சொல், எழுத்து சொல் ஆகியவற்றிற்கு இலக்கணம் காணப்படும். ஆனால் பொருள் என்ற இலக்கணக் கூறு தமிழ்மொழிக்கே சிறப்பாக அமைந்து. அறம் பொருள் இன்பம் என்ற உறுதிப்பொருள் மூன்றனையும் தமிழ் இலக்கணநூலார் அகம் புறம் என்ற பகுப்பினுள் அடக்கி அவை பற்றிப் பாடுவதற்குச் சில இலக்கணக் கோட்பாடுகளையும் நிறுவினர். இக்கோட்பாடுகள் அவ்வக்காலத்து மாறும் புறச்சூழல்களை அடிப்படையாகக் கொள்ளாமல் மனிதனின் அகஉணர்வுகளை உட்கொண்டு அமைக்கப்பட்டவை. ஆதலின் இவற்றில் காணப்படும் அகவுணர்வுகள் காலம் மாறினும் தாம் மாறாமல் என்றும் நிலைத்து நிற்பவையாகும். அன்பு மாறாத இல்லறக் காதல் வாழ்வை அகம் எனவும், நெறி மாறாத புறவுலக வீரவாழ்வைப் புறம் எனவும் பகுத்து ஒவ்வொன்றன்கண்ணும் பல திணைகளையும் அவற்றின் உட்பிரிவுகளையும் விளக்கித் தமிழிலக்கணநூலார் பற்பலகோட்பாடுகளை உருவாக்கினர்.

அகப்பொருள் ஒழுக்கத்தைக் களவு எனவும் கற்பு எனவும் இருகூறுகளாகப் பகுத்துக் களவொழுக்கத்திற்கு மிகுந்த சிறப்புக் கொடுத்தனர். இக்களவொழுக்கம் இருதிங்களை விஞ்சி நிகழக் கூடாது எனவும், அது திருமணத்தில் முடிந்து பின் கற்பு ஒழுக்கமாக



மாறவேண்டும் எனவும் குறிப்பிட்டனர். களவுக்காலத்தில் தலைவன் தலைவி பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி இவர்களிடையே கூற்று நிகழும். கற்புக்காலத்தில் இவர்களோடு நற்றாய், பாணன், கூத்தன், விறலி, பரத்தை. அறிவர், கண்டோர் இவர்களிடையேயும் கூற்று நிகழும் என்பது அகஇலக்கணக் கோட்பாடு. இவருள் ஒருவரும் இயற்பெயர் சுட்டப் பெறார்.

இவ்வகப்பொருளில் தலைவனும் தலைவியும் எல்லா நலன்களும் வாய்க்கப்பெற்ற செல்வர்களாக இருப்பர். தலைவ னுக்கு எண்ணிறந்த நண்பர்களும் தலைவிக்குத் தோழியர் பலரும் உண்டு. தலைவன் தோழர் புடைசூழ வேட்டைக்குச் செல்வதும், தலைவி தோழியர் புடைசூழப் பூந்தோட்டத்துக்குப் பூப்பறிக்கச் செல்வதும் வழக்கம். தலைவனுக்கு அவனுடைய நன்மையையே பேணும் உயிர்த்தோழன் ஒருவனும், தலைவிக்கு அவளது நன்மைக்காகவே வாழும் உயிர்த்தோழி ஒருத்தியும் இருப்பர். தலைவியினுடைய தோழி அவளுடைய செவிலியின் மகள் ஆவாள்.

எதிர்பாராத வகையில் தனித்து நிற்கும் தலைவியைத் தோழரைப் பிரிந்து வேட்டையைத் தொடர்ந்து தனித்து வந்த தலைவன் காண்பான்; அவள் உள்ளக்குறிப்பை உணர்ந்து அவளுக்குத் தன்னிடத்து வேட்கை உள்ளமையால் அவளோடு அளவளாவிப் பிரிந்து செல்வான். மறுநாளும் அதேஇடத்தில் அவளைச் சந்தித்து அளவளாவ வாய்ப்பு ஏற்படலாம். பின் தன் உள்ளநிலையை அவன் தன் பாங்கனிடம் கூறி அவனை அனுப்பித் தலைவி குறித்த இடத்தில் தன்னை எதிர்பார்த்து நிற்பதை அறிந்து அவளைச் சந்திப்பான்; தான் பின் மறைந்திருந்து தலைவியின் செயல்களால் அவள் உயிர்த்தோழியாவாள் யாவள் என்பதனை உணர்ந்து அத்தோழியிடம் பலவாற்றான் உரையாடி அவள் வாயிலாகத் தலைவியை அடைய முயல்வான். தோழி தலைவன் விருப்பினை எளிதில் நிறைவேற்றுவாள் அல்லள். ஆகவே தலைவன், தலைவி தனக்கு மிக இன்றியமையாதவள் எனவும் அவளை அடைவதற்குத் தான் மடலேறவும் துணிந்துவிட்டதாகவும் கூறுவான். மடலேறுதலாவது - ஆண்மகன் ஒருவன் தான் விரும்பிய, தன்னை விரும்பிய காதலி தனக்குக் கிட்டுதற்கு இடையூறு உண்டாயின், உடலில் சாம்பலைப் பூசி எருக்கமாலை

அணிந்து. பனைமடலால் செய்யப்பட்ட குதிரைமீது தலைவியின் படத்தைத் தன்கையில் வைத்துக்கொண்டு ஏறி அக்குதிரையினைத் தெருக்களில் சிறுவர்களைக்கொண்டு இழுத்துவரச்செய்து, உணவு உண்ணாது நீர் பருகாது மக்களுடைய இரக்கத்திற்கு உரியவனாகி இரக்கத்தால் தலைவிதமர் அவளைத் தனக்கு மணம் செய்விக்கச் செய்தலும், அவ்வாறு செய்யாவிடின் தான் அவள்நினைவோடு உயிர் நீத்தலுமாம். ஆடவர்தாம் மடல் ஏறலாம். மகளிர் மடல் ஏறுதல் கூடாது என்பது அகஇலக்கணக் கோட்பாடு.

தோழி, தான் தலைவியொடு களவொழுக்கம் நிகழ்த்துதற்கு வேண்டிய தலைவனுக்கு அரிதின் இசைவு தந்து அவர்கள் பகலில் சந்திப்பதற்குரிய இடத்தை வரையறுத்துக் கூறுவாள்; சிலநாள் பகலில் அவர்கள் சந்திப்பதனை விலக்கி அவனை விரைவில் தலைவியை மணந்து கொள்ளுமாறு வற்புறுத்துவாள். அவன் சிலநாள்கள் களவொழுக்கத்தை நீட்டித்தலை வேண்டவே, இரவில் தம் இல்லத்தினைச் சுற்றியுள்ள தோட்டத்தில் அவர்கள் சந்திக்கத் தோழி ஏற்பாடு செய்வாள். அதுவும் தாய் உறங்காமை, ஊரவர் உறங்காமை, நாய் குரைத்தல் முதலியவற்றால் இயலாததாகவே, விரைவில் தலைவன் தன்னை மணந்துகொள்ளுமாறு வற்புறுத்தும்படி தலைவி தோழியை வேண்ட, அவர்கள் சந்திப்பில் உள்ள இடையூறுகள் பலவற்றையும் சிறிது கற்பனையோடும் கூட்டித் தோழி தலைவனிடம் கூறி விரைவில் திருமண ஏற்பாட்டோடு வருமாறு அவனை வற்புறுத்துவாள். அவன் திருமணத்திற்குரிய பொருள் திரட்டி வருவதற்குச் சிலநாள்கள் அவர்களைப் பிரிந்து வேற்றூர் செல்வான்.

எவ்வாறாயினும் களவொழுக்கம் இரண்டுதிங்கள் எல்லையைக் கடக்கக்கூடாது என்பதே கோட்பாடு. களவொழுக்கம் தொடங்கப் பட்ட காலத்தில் தலைவன் பதினையாண்டும் பத்துத்திங்களும் நிறைந்த வயதினன். தலைவி பதினோராண்டும் பத்துத்திங்களும் நிறைந்த வயதினள். இவர்களுக்கு முறையே பதினாறாண்டும் பன்னீராண்டும் நிரம்பும்போது திருமணம் நிகழவேண்டும் என்பது. தலைவன் தலைவி வீட்டாரிடம் தன் குடும்பத்துச் சான்றோர்கள் வாயிலாகப் பரிசப்பொருளை வழங்கித் திருமணம் பேசி அவளை நாடறிய நன்மணம் புணர்வான்.



தலைவன் சிலநாள்கள் தலைவியைச் சந்திக்க வர இயலாதபோது தலைவி பெரிதும் வருந்த, அவளது முகவாட்டத்தைக் கண்ட செவிலி ஏதேனும் தெய்வக்குற்றத்தான் ஆயதோ என்று அஞ்சி வேலனை அழைத்து மலைநாட்டுத் தெய்வமாகிய முருகனுக்கு மறியறுத்து (இளம் ஆட்டினையறுத்து) வெறியாட்டு நிகழ்த்து ஏற்பாடு செய்வாள். அப்பொழுது தோழி மெய்யும் பொய்யும் கலக்கத் தலைவியின் குலத்திற்கும் ஒழுக்கத்துக்கும் பெண்மைக்கும் இழுக்கு வாராத வகையில் செவிலியிடம் தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள தோடர்பை எடுத்துக்கூறித் திருமணத்துக்கு ஏற்பாடு செய்வதும் உண்டு. அப்பொழுதும் தோழி தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள தொடர்பைத் தலைவிக்குக் குறைவு வாராத வகையில் எடுத்துக்கூறி அயலவர் மகட்பேசத் தமரை அனுப்பியவழித் தலைவிதமர் மகட்கொடை மறுப்பதும் உண்டு.

அந்நிலையில் தலைவன், தோழிவாயிலாகத் தலைவியைத் தன்னொடு உடன்போக்குக்கு ஒருப்படச்செய்து அவளை அழைத்துக்கொண்டு தன் உறவினர் ஊருக்கு உடன்போக்குச் செல்லுதலும் உண்டு. இருவரும் நடந்தே பாலைநிலத்தைக் கடந்து தலைவனுடைய உறவினரின் ஊரினை அடைவதாகவே செய்யுள் புனையப்படும். தலைவி தலைவனுடன் உடன்போன செய்தியை அறிந்த செவிலி அவர்களைத் தேடச்சென்று வழியில் சான்றோர்களால் அறிவுரை கூறப்பட்டு மீண்டு வருதலும் உண்டு. உடன்போக்குக் கேட்டு வெகுண்ட தலைவிதமர் அவரைப் பின்தொடர்ந்து தலைவியை மீட்டுப் பின் அவள் உள்ளக்கிடக்கை அறிந்து அவளை ஊர் அறியத் தலைவனுக்கு மணம் செய்துவைப்பதும் உண்டு. உடன்போய்த் தம் திருமணத்தை முடித்துக்கொண்ட தலைவன்தலைவியர் பின்மண மக்களாய்த் தலைவியது ஊருக்குத் திரும்பி வருவர். இவ்வாறு பலவகைகளில் தலைவன்தலைவியர் களவொழுக்கம் நிகழ்த்தித் திருமணம் செய்துகொள்ளும் செய்தி தமிழிலுள்ள அகஇலக்கியத் துள் பலவகைக் கற்பனைகளோடு புனையப்பட்டிருக்கிறது.

திருமணத்தின்பின் தலைவனும் தலைவியும் தோழியையும் உடன்கொண்டு தனியே இல்லறம் நிகழ்த்துவர். அவர்கள்

இல்லறத்தைக் காணச் செவிலி சென்று மகிழ்ந்து அம்மகிழ்ச்சிச் செய்தியைத் தம் ஊருக்குத் திரும்பிவந்து நற்றாய்க்கு உணர்த்துவாள்.

தலைவனும் தலைவியும் இல்லறம் நிகழ்த்தும் பகுதி கற்பொழுக்கம் எனப்படும். இக்காலத்தில் தலைவன் தலைவியைப் பிரிந்து வேற்றிடங்களில் தங்கிச் செயற்பட வேண்டிய நிலை ஏற்படுதலும் உண்டு. தலைவன் சான்றோர்களை அணுகி வழிபட்டுத் தத்துவநூல்களைப் பயில்வதற்கு ஓராண்டுக்காலம் முதல் மூன்றாண்டுக்காலம் வரை தலைவியைப் பிரிந்து வாழும் பிரிவே கற்புக்காலத்து நீண்ட பிரிவாகும். இது தலைவனும் தலைவியும் பல்லாண்டு இல்லறம் நிகழ்த்திப் புதல்வற்பயந்த பல ஆண்டுகளுக்குப் பின் நிகழ்வதாகும். இவையன்றித் தன் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பினைக் கவனிக்கவும் மனவேறுபாடுற்ற மன்னர் இருவரின் மனப்பகையைத் தீர்க்கத் தூதனாகச் செயற்படவும், போரில் ஈடுபட்டிருக்கும் தன் அரசனுக்கு உதவிசெய்யவும் தேவகாரியங்களையும் பிதிரர் காரியங்களையும் தான் ஈட்டிய பொருளைக் கொண்டே நிகழ்த்த வேண்டும் என்ற சான்றோர் கருத்தினை ஒட்டிப் பொருளீட்டவும் பிரிதலும் உண்டு. இப்பிரிவுகளெல்லாம் ஓராண்டு எல்லைக்கு உட்பட்டவை.

குறிஞ்சியாகிய புணர்தல்ஒழுக்கம் களவு கற்பு என்ற இரு நிலைக்கும் உண்டு. முல்லையாகிய இருத்தல், பிரிந்துசென்ற தலைவன் வருகையைத் தலைவி எதிர்பார்க்கும் நிலை கற்பின்கண்ணேயே நிகழ்வதாம். மருதமாகிய ஊடல் பெரும்பாலும் தலைவன் பரத்தையிற் பிரியும் கற்புக்காலத்திற்கே உண்டு. நெய்தலாகிய இரங்கல் தலைவன் குறித்த நேரத்து வாராமை குறித்து வருந்துதற் குரிய களவிற்கே உரியது. பாலையாகிய பிரிவு களவுக்காலத்து வரைவிடைவைத்துப் பொருள்வயின் பிரிதலுக்கும் கற்புக்காலத்துப் பரத்தையிற்பிரிவு நீங்கலான ஏனைய பிரிவிற்கும் உண்டு என்று கொள்ளப்படும்.

இச்செய்திகளை எல்லாம் தொல்காப்பியம் பொருளதி காரத்தில், அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல் என்ற இயல்களில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளது.



**தொல்காப்பியத்திற்குப் பின்பு தோன்றிய அகஇலக்கண நூல்கள்**

தொல்காப்பியத்தின் பின்னர்த் தோன்றிய இறையனார் அகப்பொருள், பெரும்பொருள் விளக்கம், தமிழ்நெறி விளக்கம் போன்றன களவியல் கற்பியல் செய்திகளைக் கோவையாக அமைத்து விளக்கின. இக்காலத்தில் தமிழில் மணிவாசகர் அருளிய திருச்சிற்றம்பலக்கோவையாரும், பாண்டிக்கோவை முதலிய இலக்கியங்களும் தோன்றின. இவை கிளவித்தலைவனாகிய அகப்பொருள் தலைவனோடு பாட்டுடைத்தலைவர்களின் பெயரையும் அவர் பெருமையையும் பாடல்தோறும் எடுத்து இயம்புவனவாகும். பாட்டுடைத் தலைவன் என்பான் ஒருவனைக் கொள்ளாத அம்பிகாபதிக்கோவை போன்ற கோவைகள் மிகவும் அரியனவாகவே இருக்கலாம். இவற்றை எல்லாம் மனம்கொண்டு நாற்கவிராசநம்பி என்பார் இயற்றிய அகப்பொருள் விளக்கம் அகப்பொருள் இலக்கணநூல்களுள் மிகவும் பிரசித்தி பெற்று விட்டது. அது குறிப்பிடும் கிளவிகளைக் கொண்டே பல கோவைப் பிரபந்தங்கள் பிற்காலத்துத் தோன்றுவவாயின.

பெருந்தமிழர்களான ஆழ்வார்கள் அருளிச்செயல் தமிழ் என்னும் இலக்கியச் சோலையில் பூத்த மணமிக்க மலர்களாகும். மேலும் தமிழிலக்கணக் கோட்பாடுகளுக்குட்பட்டுத்தான் ஆழ்வார் களின் அருளிச்செயல் அமைந்துள்ளது. 'பகவத் விஷயம்' என்று பெயரிடப்பட்ட திருவாய்மொழியின் அனுபவத்திற்கு முதல் படியாய் அமைந்துள்ளது திருவிருத்தம். திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரியதிருமொழியிலும் அகப்பொருள் கோட்பாடு கள் ஆங்காங்கே பொதிந்திருப்பதனை நாம் காணலாம். தொல் காப்பிய பொருளதிகாரக் கோட்பாடுகள் தொடங்கி தஞ்சை வாணன் கோவை ஈறாக அமைந்துள்ள இலக்கண இலக்கிய நூல்களில் நுவலப்படும் செய்திகளை உள்ளத்தே கொண்டாலன்றி ஆழ்வார் களின் பாடல்களில் பொதிந்துள்ள சுவையின்பத்தை நாம் பெறு வதற்கு இயலாது.

பக்தி நூல்களில் பல அகப் புறப்பாடல்கள் உள்ளன. வைணவ இலக்கியங்களில் அகப் பொருள் செய்திகளை

தன்னுள்ளே கொண்டுள்ளது என்று சிறப் பாகக் கொள்ளப்படுவது திருவிருத்தமாகும்.

அகப்பொருள் கோட்பாட்டுச் செய்திகளைத் தலைவன் தலைவியைக் காண்பது முதல் களவொழுக்கம் நிகழ்த்திப்பின் தலைவியை நாடு அறிய மணந்து கொண்டு கற்புக்காலப் பிரிவு களை நிகழ்த்தி நல்வாழ்வு வாழ்வதுவரை உள்ள செய்திகளை நிரல்பட அமைத்துக் கோவையாகப்பாடும் வழக்கம் இறையனார் களவியல் என்ற நூலின் உரையிலிருந்தே தொடங்குகிறது. அடுத்து மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையார் அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கோத்து அமைக்கிறது. நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் என்ற நூலையும் (நம்பியகப் பொருள்) அதற்கு இலக்கியமாக அமைந்துள்ள தஞ்சைவாணன் கோவையையும் பின்பற்றியே பிற்காலக் கோவை நூல்கள் யாவும் தோன்றியுள்ளன.

திருவிருத்தத்தில் எம்பெருமானுடைய பெயர் கூறப்பட்டு அவனையே கிளவித்தலைவனாகவும் கொண்ட பாசுரங்கள் 74 உள்ளன. அவை யாவும் அகப்பாடல்கள் அல்ல, அகப்புறப் பாடல்களே. திருவிருத்தத்தில் தலைவி கூற்றாக அமைந்த பாடல்கள் 56. தோழி கூற்றாக அமைந்த பாடல்கள்-21. தலைவன் கூற்றாக அமைந்த பாடல்கள்-14. செவிலி கூற்றாக அமைந்த பாடல்கள்-4. (19ஆம் பாடல் தோழி கூற்றாக சில உரையாசிரியர் களாலும், செவிலி கூற்றாக சில உரையாசிரியர்களாலும் கொள்ளப் படுகிறது. ஆயினும் இங்கு 19ஆம் பாடல் தோழி கூற்றாகக் கொள்ளப்பட்டு உள்ளது.) நற்றாய் கூற்று-1. கட்டுவிச்சி கூற்று-1. பாங்கன் கூற்று-1. -98 பாடல்கள்.

திருவிருத்தத்தில் 98 பாடல்கள் அகம் மற்றும் அகப்புறப் பாடல்களாகும். முதல் பாட்டான 'பொய்நின்ற ஞானமும்', 'நல்லார் நவில் குருகூர் நகரான்' (பாடல் 100) அகத்துறையின் பாற்படாது. அவற்றை ஆழ்வார் தாமான தசையில் அருளிச் செய்துள்ளார்.

இலக்கணவிளக்க ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியதையே தாமும் எடுத்து மொழிவர். உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையுமாகக் கூறும் புலனெறி வழக்கம் பற்றி அகப்



பொருட்கோட்பாடு அமைக்கப்பட்டது என்பது பரிமேலழகர் இளம்பூரணர் ஆகியோர் கருத்தாகும். இல்லோன் தலைவனாகக் கூறப்படுவது என்பார் சேனாவரையர். இல்லது இனியது நல்லது எனப் புலவரால் நாட்டப்பட்டது அகப் பொருட் கோட்பாடு என்பது 'இறையனார் அகப்பொருள்' உரை கூறும் செய்தியாகும். எவ்வாற்றானும் அகப் பொருட் கோட்பாடுகளை முறையே பின்பற்றிச் செய்யுள் இயற்றல் தமிழிற்கே உரிய சிறப்புச் செய்தியாகும்.

இலக்கணக் கோட்பாடுகளின்படி 56 நாட்கள் களவு நீடிக்கும். அதன் பின் கற்பியல் காட்சிகள் தொடரும். ஆகவே களவு நிகழ்ந்தபின்பே கற்பு நிகழும். திருவிருத்தம் கோவைப் போலி யாதலால் இலக்கண வரம்பிற்குட்பட்டு 56 நாள் நிகழ்ச்சிகள் கூறப் படாது முதற்பாட்டே (அகஇலக்கியக் கோட்பாடுகளின்படி 2ஆம் பாட்டு முதல் 99ஆம் பாட்டு ஈறாக அமைந்துள்ளவைகளுக்கே துறையிலக்கணம் கூறப்படும்.) திருவிருத்தம் இரண்டாம் பாட்டு 'தலைவியின் வேறுபாடு கண்ட தோழி வியந்துரைத்தல்' என்னும் துறையின் பாற்படும்.

**களவியல் ஆறாம் நாள் நிகழ்ச்சி (ஆண் மடலேறுதல்)**

தோழி இயம்பியவாறே மறுநாள் அவண் வந்த தலை வனுக்கு யாதொரு பயனுங் கிடைத்திலது, தோழியும் அவனை வரவேற்றிலள். ஆதலின் அவ்வேட்கை நோய்க்கு மடலேறுதலே தக்க மருந்தெனத் தீர்மானித்துத் தோழியைப் பார்த்துக் கூறத் தொடங்குவான்.

**மடலேறும் முறை:** மடலேற விரும்புவான் சிறப்பு உடை ஒன்று மின்றி உடலெங்கும் நீறு பூசித் தான் கருதிய தலைவியின் உருவத்தைத் தானே தீட்டி, அதன் தலைப்புறத்தில் அவள் பெயரெழுதி அக்கிழியைக் (கிழி-எழுதுபடம்)தன் கரத்தில் பிடித்து ஊர் நடுவே நாற்சந்தியில் உணவுறக்கமின்றி, அக்கிழி மாட்டே பார்வை யையும், சிந்தையையும் இருத்தி வேட்கை வயத்தனாய் வேறு உணர்ச்சி யற்று இருப்பன். அவ்வமயம் பசு அவன்மீது பாயினும், நெருப்பு மேல் படினும் அறிதலின்றி மழை, வெயில் காற்றிற்கு அவன் மனம் சலியாதிருக்கும். இதனைக் கண்ட

அவ்வூரார் நீ மடலேறுதியோ? எனக் கேட்பர். அதற்கு அவன் ஒப்புக் கொள்ளின், அரசனுக்குத் தெரிவித்து பனங் கருக்காற் குதிரையும், பனந்தருவினால் வண்டி முதலியனவுஞ் செய்த மடலில் அவனை ஏறுமாறு கேட்பர். பின்பு தலைவன் பூளை, (இலவம் பஞ்சு மரத்தின் பூ) எலும்பு, எருக்கு முதலிய மாலைகளை அணிந்து அம்மடலில் ஏறுவான். நாட்டார் அந்த வீதியில் ஈர்த்துச் செல்வர். அவ்வுருளை உருண்டோடும் போது பனங்கருக்கு அத்தலைமகள் உடலைக் கீறி அறுக்கும். அவ்வறுபட்ட இடத்தில் வீரியம் (சுக்கிலம் மிகுதியாகப் பெருகுகை) தோன்றின் அவன் விரும்பிய பெண்ணை அலங்கரித்து மணம் செய்து தருவர். செந்நீர் தோன்றின் அவனைக் கொலை செய்வர்.

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான்.

என்ற தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பா-38இன்படி பெண்கள் மடலூர்வது தமிழர் மரபாகாது. ஆண்களே மடலூர்வது உண்டு.

மடல் பற்றிப் பழந்தமிழ் நூலான தொல்காப்பியமும் சில குறிப்புகளைத் தருகின்றது; மடலேறுதல் பெருந்திணைக்கு உரியது என்பதும், அம்மடலேற்றம் பெண்களுக்கு உரியதன்று என்பதும் அவற்றுள் முக்கியமானவை.

''ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே''
(பொருளதிகார நூற்பா-54)

என்னும் நூற்பாவால் தொல்காப்பியர் மடலேறுவதைப் பெருந் திணைப் பாற்படுத்துகிறார் என அறியலாம்.

மகளிர் மடலேற்றத்தை விலக்கும் நூற்பா-38, ஆடவர் மடலேற்றத்தை அனுமதிப்பதை உணரலாம். ''மகடூஉ மடலேறுதல் இல்லையெனவே ஆடூஉ மடலேறுதல் உண்டு என்பது பெற்றாம்'' என்னும் இளம்பூரணர் விளக்கத்தாலும் இதை அறியலாம்.



மடலேறும் உரிமையுடைய ஆடவன், 'மடல் ஊர்வேன்' என்று கூறுவதுண்டு. இது 'மடற்கூற்று' எனப்படும். இவ்வாறு ஆடவன் மடற்கூற்று நிகழ்த்துமிடத்தையும் தொல்காப்பியம் கூறுகின்றது.

இவ்வாறு தலைமகன் மடலேறுவதாகக் கூறுவது களவியலில் நான்காவது கிளவியாக பாங்கியிற் கூட்டத்தில் நிகழ்வதாகும். இக்கூற்றுப் பெரும்பாலும் பொய்க்கூற்றாகவே இருக்கும்.

மகளிர் மடலேறுதல் கூடாது என்று கூறும் தொல்காப்பிய இலக்கணத்தையே திருக்குறளும் வலியுறுத்துகிறது.

**''கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்**
**பெண்ணின் பெருந்தக்கது இல்''** **(குறள்-1137)**

என்னும் குறளால் அதனை அறியலாம்.

மடலூர்தல் ஒரு தற்கொலை முயற்சியாகவே நூல்களில் நுணுக்கமாகச் சுட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு பழந்தமிழ் நூல்களில் இடம்பெறும் 'மடல்' என்னும் துறையையே ஒரு பிரபந்தமாக வளர்த்துப் பாடும் மரபு கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றியது. இம்மரபினைத் தோற்றுவித்தவர் திருமங்கையாழ்வாரே ஆதல் வேண்டும். இவர் பாடிய சிறியதிருமடல், பெரியதிருமடல் ஆகிய இரு மடல்களும் திவ்வியப்பிரபந்தத்துள் 'இயற்பா' என்னும் பிரிவில் இறுதியாக இடம்பெறுகின்றன. இவ்வாழ்வாரை எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக ஆய்வாளர் கருதுகின்றனர். இவர் காலத்திற்கு முந்தியே தமிழில் மடல்பிரபந்தங்கள் வழங்கியமைக்குச் சான்று எதுவும் இல்லை. தமிழில் உள்ள மடல் நூல்களில் காலத்தால் முந்தியனவாகத் திருமங்கையாழ்வாரின் இரு மடல்களையுமே கருதலாம்.

**மரபு மாற்றம்**

காதலியை அடைதற் பொருட்டுத் தலைவன் மடலேறலாம் என்பது பழைய இலக்கிய மரபு. அம்மரபுக்கு மாறாக, திருமால் மீது

காதல் கொண்ட தலைவி அவனை அடையப்பெறாத நிலையில் மடலேறத் துணிந்ததாக இரு மடல்களிலும் பாடியுள்ளார் திருமங்கையாழ்வார்.

பெரியதிருமடலின் தலைவியின் கூற்றாக,

''அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவ துண்டு, அதனை யாம்
தெளியோம்''
(பெரியதிருமடல் கண்ணிகள் 38,39)

என்று பாடுகிறார் ஆழ்வார். இங்கே 'தென்னுரை' என்பதில் 'மகளிர் மடலேறுவதில்லை' என்னும் தமிழ் வழக்கையே ஆழ்வார் குறிப்பி டுகின்றார். இதனால் திருமங்கையாழ்வார் வாழ்ந்த காலத்திலும் 'மகளிர் மடலேறலாகாது' என்னும் தமிழ் வழக்கில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்றும் அந்த வழக்குக்கு மாறாகவே மகளிர் மடலேற்றத்தை ஆழ்வார் பாடுகின்றார் என்றும் அறியலாம்.

நம்மாழ்வாரும் 'மாசறுசோதி' என்று தொடங்கும் திருவாய் மொழியில் (5-3) பிரிவாற்றாமை மேலீட்டால் தலைமகள் காதல் கைம்மிக்கு மடலூரத் துணிவதாகப் பாடியுள்ளார். இங்கும் தலைவி மடலூர்ந்ததாக இல்லை. 'ஊர்வேன்' என்ற தன் துணிவை உரைத்ததாகவே உள்ளது. நம்மாழ்வார் பாடலே திருமங்கையாழ்வார் நாயகி நிலையில் மடல் எடுக்க முற்பட்டதிற்கு முன்னோடியாய் அமைந்தது எனலாம். திருமங்கையாழ்வார் பாடிய இரண்டு திருமடல்களிலும் சில தனித்தன்மைகளைக் காணமுடிகிறது.

திருமடல்களிற் காணப்படும் இத்தனித்தன்மைகளின் அடிப்படையிலேயே பன்னிருபாட்டியல் மடல் பிரபந்தத்துக்கு இலக்கணம் வகுக்கின்றது. எனினும் திருமங்கையாழ்வாரின் மடல்கள் பெண் மடலேறுவது பற்றிப் பேசுவதால்,

''மடல்மாப் பெண்டிர் ஏறார்; ஏறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே''
''கடவுளர் மேற்றே காரிகை மடலே''



என அந்நூல் விதிகளை அமைக்கின்றது. இலக்கியம் கண்டதற்கு எழுந்த இலக்கணம்தான் இது. எனினும் 'மகளிர் மடலேறார்' என்னும் தமிழ் மரபினையும் ஆழ்வாரின் மரபு மீறலையும் மறக்காமல் நினைவிற்கொண்டு, ஆழ்வாரின் இலக்கியத்துக்கு விலக்கு அளித்து அதனை ஏற்கும் முறையில் அமைந்த இந்நூற்பாக்கள் புதிய இலக்கியத்துக்கான ஒப்புதல் போல் உள்ளன.

**களவியல் பதினோறாம் நாள் செய்திகளில் இடம் பெறுவது காமமிக்க கழிபடர்கிளவி.**

காம மிக்க கழிபடர்க் கிளவி என்பது, வேட்கைமிக்கு சிந்தித்துச் சொல்லுஞ்சொல். இக்கிளவிச் செய்யுட்குக் கருத்து: கடல், கானல், பொழில், விலங்கு, புள் இவற்றை நோக்கித் தலைவி இரங்கிக்கூறல்.

நாச்சியார் திருமொழியில் காமம் மிக்க கழிபடர்க் கிளவி துறையில் அமைந்துள்ள சில பாடல்கள்.

1. மாமுத்தநிதிசொரியும் மாமுகில்காள்! ✱வேங்கடத்துச்
சாமத்தினிறங்கொண்ட ✱தாடாளன்வார்த்தையென்னே!✱
காமத்தீயுள் புகுந்து கதுவப்பட்டு, இடைக்கங்குல் ✱
ஏமத்தோர்தென்றலுக்கு இங்கிலக்காய்நானிருப்பேனே.
(நாச்சியார்திருமொழி 8-2)

2. மின்னாகத்தெழுகின்ற மேகங்காள்!✱ வேங்கடத்துத்
தன்னாகத்திருமங்கை தங்கியசீர்மார்வர்க்கு ✱
என்னாகத்திளங்கொங்கை விரும்பித்தாம்நாள்தோறும் ✱
பொன்னாகம்புல்குதற்கு என்புரிவுடைமைசெப்புமினே.
(நாச்சியார்திருமொழி 8-4)

3. சங்கமாகடல்கடைந்தான் தண்முகில்காள்! ✱ வேங்கடத்துச்
செங்கண்மால்வேடிக்கீழ் அடிவீழ்ச்சிவிண்ணப்பம் ✱
கொங்கைமேல்குங்குமத்தின் குழம்பழியப்புகுந்து ✱ ஒருநாள்
தங்குமேல் என்னாவிதங்குமென்றுஉரையீரே.
(நாச்சியார்திருமொழி 8-7)

4. கண்ணனென்னும்கருந்தெய்வம் காட்சிப்பழகிக்கிடப்பேனை ✱
புண்ணில்புளிப்பெய்தாற் போலப் புறம்நின்று அழகுபேசாதே ✱
பெண்ணின் வருத்தமறியாத பெருமானரையில்பீதக
வண்ணவாடைகொண்டு ✱ என்னை வாட்டம் தணியவீசீரே.
(நாச்சியார்திருமொழி 13-1)

5. ஆரேஉலகத்துஆற்றுவார்? ஆயர்பாடிகவர்ந்துண்ணும் ✱
காரேறுழக்கஉழக்குண் தளர்ந்தும்முறிந்தும்கிடப்பேனை ✱
ஆராவமுதமனையான்தன் அமுதவாயிலூறிய ✱
நீர்தான்கொணர்ந்துபுலராமே பருக்கிஇளைப்பைநீக்கீரே.
(நாச்சியார்திருமொழி 13-4)

6. உள்ளேயுருகிநைவேனை உளளோஇலளோவென்னாத ✱
கொள்ளைகொள்ளிக்குறும்பனைக் கோவர்த்தனனைக்கண்டக்கால் ✱
கொள்ளும்பயனொன்றில்லாத கொங்கைதன்னைக்கிழங்கோடும் ✱
அள்ளிப்பறித்திட்டு அவன்மார்விலெறிந்து என்னழலைத்தீர்வேனே.
(நாச்சியார்திருமொழி 13-8)

7.தந்தையும்தாயும்உற்றாரும்நிற்கத் தனிவழிபோயினாளென்னும்சொல்லு✱
வந்தபின்னைப்பழிகாப்பரிது மாயவன்வந்துஉருக்காட்டுகின்றான்✱
கொந்தளமாக்கிப்பரக்கழித்துக் குறும்புசெய்வானோர்மகனைப்பெற்ற✱
நந்தகோபாலன்கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னைஉய்த்திடுமின்
(நாச்சியார்திருமொழி 12-3)

8. கஞ்சைக்காய்ந்தகருவில்லி கடைக்கணென்னும்சிறைக்கோலால் ✱
நெஞ்சூடுருவஏவுண்டு நிலையும்தளர்ந்துநைவேனை ✱
அஞ்சேலென்னான் அவனொருவன் அவன்மார்பணிந்தவனமாலை ✱
வஞ்சியாதேதருமாகில் மார்பில்கொணர்ந்துபுரட்டீரே.
(நாச்சியார்திருமொழி 13-3)

**களவியலில் பதினாறாம் நாள் செய்தியாக வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிவு மற்றும் காலமயக்கு.**

வரவிடை வைத்துப்பொருள் வயிற் பிரிதல் - மணம் செய்து கொள்ள பொருளீட்டுதற் கெனத் தலைவன் தலைவியைப் பிரிதல்



இவ்வாறு தலைவன் இருந்து வருகையில் தலைவியை மணம் புரிதற்குப் பரிசம் வேண்டியிருந்தது. அதற்குப் பொருளீட்டத் தான் பிரிவதைத் தோழியிடம் கூறித் தலைவிக்கும் புகலுமாறு செப்பினான். ''இவ்வார்த்தைத் தலைவிக்குக் கரும்பின் சாற்றில் வேம்பைக் கலந்ததை யொக்கும். ஆதலின் நீரே சென்று தலைவியின் மனம் பொருந்துமாறு சொல்லி பின் செல்வீராக,'' எனத்தோழி விடையிறுத்தனள். யான் இம்மாலைப் பொழுதிற்குள் திரும்பி வருவேன் எனத் தலைவன் சென்றான். நடப்போரின் காலை அறுக்கும் கற்கள் நிறைந்த காட்டில் தலைவன் சென்றதைக் தோழியால் அறிந்த தலைவியின் மனம் வருந்திற்று. இதையுணர்ந்த தோழி நின்னை மணத்தற்குப் பொருள் கொணதற்பொருட்டன்றோ தலைவன் பிரிந்தது, இதற்கு வருந்துவானேன்? எனத் தோழி தலைவியை இடித்துரைத்தனள். தன் மனோநிலை அறியாது இங்ஙனம் தோழி செப்புதற்குத் தலைவியின் நெஞ்சம் பெரிதும் வருந்தியது. விரைவில் தலைவன் திரும்பி விடுவான் என்ற தோழியின் சொற்கள் தலைவியைச் சிறிது ஆற்றுவித்தன.

தலைவன் வருவதாகச் சொன்ன கார்ப்பருவம் வந்தது. அவ்வமயம் தலைவன் வாராமையை நினைத்துத் தலைவி புலம்பினள். ''இது மழை கால மல்ல. அல்லாத காலத்தில் இம்மழை பெய்கிறது'' எனத் தோழி செப்பியதற்கு ''மழைக்கால மன்றேல் மயில் ஆடுமோ! கொன்றை பூக்குமோ! இந்திரவில் உண்டாகுமோ!'' எனத்தலைவி கூறினாள். ''இம்முகில் தலைவர் தூதாக நின்னிடம் வந்துள்ளது. இனி சிறிது நேரத்தில் தலைவரும் வருவர்'' எனப் பகர்ந்த தோழியின் வார்த்தைகள் தலைவியை ஆற்றுவித்தன. பிரிந்து சென்ற தலை மகனுக்கும் ஆற்றாமை மிகுந்தது.

**திருவிருத்தத்தில் காலமயக்குப் பற்றிய பாடல்கள்.**

1. ஞாலம்பனிப்பச்செறித்து ✱ நன்னீரிட்டுக்கால்சிதைந்து
நீலவல்லேறுபொராநின்றவானமிது✱ திருமால்
கோலஞ்சுமந்துபிரிந்தார்கொடுமைகுழறுதண்பூங்
காலங்கொலோ? அறியேன் ✱ வினையாட்டியேன் காண்கின்றவே.
(திருவிருத்தம் - 7)

2. கடல்கொண்டெழுந்ததுவானம் ✸ அவ்வானத்தையன்றிச்சென்று
கடல்கொண்டொழிந்தவதனால்இது ✸ கண்ணன்மண்ணும்விண்ணும்
கடல்கொண்டெழுந்த அக்காலங்கொலோ? புயற்காலங்கொலோ?
கடல்கொண்டகண்ணீர் ✸ அருவிசெய்யாநிற்கும் காரிகையே.
(திருவிருத்தம் 18)

3. மலர்ந்தேயொழிந்தில மாலையும் மாலைப்பொன்வாசிகையும்
புலந்தோய்தழைப்பந்தர் தண்டுறநாற்றி ✸ பொருகடல்சூழ்
நிலந்தாவியஎம்பெருமான் தனது வைகுந்தமன்னாய்!
கலந்தார்வரவெதிர்கொண்டு ✸ வன்கொன்றைகள்கார்த்தனவே.
(திருவிருத்தம் - 68)

**இத்துணையும் பதினாறாநாட் செய்தியென் றுணர்க. பதினாறாம் நாள் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் ஐம்பத்தொன்றாம் நாள் மீண்டுவந்தமையால் முப்பத்துநான்கு நாள் இடைப்பட்டதென உணர்க.**

è÷Mò™ ä<ð^Fó‡ì£< ï£œ ªêŒFèO™ ªõPMô,è™ °PŠHìŠð´Aø¶.

ð£ƒA ªõPMô,è™:

**பாங்கி வெறி விலக்கல் என்பது, செவிலி வெறி யாட்டாளனை யழைத்து மகட்கு நோயுற்றவாறும், அது தீருமாறும் சொல்ல வேண்டுமென்று கேட்புழி, தெய்வம் வந்தாடும்போது, பாங்கி அத்தெய்வத்தை ஆடவேண்டா என்று விலக்குதல்.**

**வெறியாட்டாளன் ஆடு பலிகொடுத்தால் தீரும் என்புழி, அவ்வாட்டைக் கொல்லாமல் விலக்கல் எனினும் அமையும்.**

ªõPMô,Aòõîù£Ÿ ªêML ð£ƒA¬ò Mù£î™:

**உமையாள் மகனைப் பண்குறைய வென்ற சொல்லை யுடைய வள்ளிக்கு நாயகனைப் பசிய மாலைசூடிய வேலினாலே வெண்குன்றமாகிய குருகுபெயர்க் குன்றத்தை யெறிந்த செவ்வேளை மங்கையர் முன்னர் இவ்வாறு நீ விளம்பியது என்ன? என்றவாறு.** (தொடரும்)